# புதிய சிந்தனையாளன் தோற்றம்

தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் 17.8.1974 இல் தன் சொந்தப் பொறுப்பில் ‘சிந்தனையாளன்’ கிழமை இதழை திருச்சியிலிருந்து வெளியிட்டு வந்தார். சிந்தனையாளன் இதழை அச்சிட்டு வெளியிடுவதற்கென்றே பாவேந்தர் அச்சகத்தைத் தொடங்கினார். சிந்தனையாளன் அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை அவரும் அவருடைய மக்களுமே மேற்கொண்டனர். அவருடைய மூத்த மகள் தமிழ்ச்செல்வி அவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்று திறம்பட நடத்தினார்.

தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் 1978 முதல் 1982 வரை இந்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு இடஒதுக்கீடு வேண்டி ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்கவும், இக்கோரிக்கையில் உள்ள நியாயத்தைப் புரிய வைக்கவும், வட மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்களையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களையும் தூண்டிப் போராடச் செய்யவும் பல மாதங்கள் தில்லியிலும் வட மாநிலங்களிலும் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அவரின் செயல்பாடுகளை அவ்வப்போழுது எழுதி அஞ்சலில் அனுப்பி, சிந்தனையாளன் ஏட்டில் வெளியிடச் செய்தார். இவை வரலாற்று ஆவணமாக உள்ளது.

1982 இல் தோழர் ஆனைமுத்து அவர்களின் மூத்த மகள் தமிழ்ச்செல்விக்கு திருமணம் நடந்தது. அப்போது சிந்தனையாளன் இதழை சென்னையிலிருந்து வெளியிடுவது என முடிவு செய்யப்பட்டது. சிந்தனையாளன் இதழ் வெளியிடு வதற்காக “பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்” தொடங்கப்பட்டது. 1983 செப்டம்பர் முதல் சிந்தனையாளன் கிழமை இதழை பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம் வெளியீடாக சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது. முதலில் கிழமை இதழாகவும் பின் மாதம் இருமுறை இதழாகவும் அதன்பின் மாத இதழாகவும் வெளியிடப்பட்டு வந்தது.

4.02.1984 வரை கிழமை ஏடாக வெளிவந்த சிந்தனையாளன் 15.02.1984 முதல் 1986 டிசம்பர் முடிய மாதம் இருமுறை இதழாக வெளியிடப்பட்டது.

பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமத்திற்கு ஏற்பட்ட இழப்பின் காரணமாக சிந்தனையாளன் இதழை கட்சி ஏடாக, வெளியிட முடிவெடுக்கப்பட்டது. அதன்படி 1988 வரை பெரியார் சமஉரிமைக் கழக மாத ஏடாகவும் கட்சியின் பெயர் 13.03. 1988 முதல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி என மாற்றப்பட்டதனால் 1988 ஏப்ரல் முதல் மா.பெ.பொ. கட்சி ஏடாக வெளியிடப்பட்டு வந்தது.

சென்னை திருவல்லிக்கேணி, இலால்பேகம் தெரு எண்-5யிலிருந்து வெளியிடப்பட்டு, பின் இராயப்பேட்டை, பெருமாள் தெரு முகவரியிலிருந்தும் அதன்பின் சேப்பாக்கம்,




“தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்”

சுவடி : 1 ஏடு : 1
ஏப்ரல் – மே 2022

ஆசிரியர்
**வாலாசா வல்லவன்**

ஆசிரியர் குழு
**க.முகிலன்**
**சா.குப்பன்**
**சி.நடராசன்**
**ந.கருணாகரன்**
**இரா.திருநாவுக்கரசு**
**முனைவர் முத்தமிழ்**
**தி. துரைசித்தார்த்தன்**

இதழ் வடிவமைப்பு :
**டெலிபாய்ன்ட்**
சென்னை - 600 005.
பேசி : 044 - 4207 5836

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**
ஆசிரியர் **‘புதிய சிந்தனையாளன்’**
2/12, சி.என்.கே.சந்து,
சேப்பாக்கம், சென்னை - 600005.

அலைபேசி எண்கள்
**86681 09047, 98947 28032**
**94885 34225**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com

இணையத்தில் படிக்க
www.keetru.com

முருகப்பா தெரு முகவரியில் இருந்தும் வெளியிடப்பட்டு வந்தாலும் புதுதில்லியில் உள்ள இந்திய செய்தியேடுகள் பதிவாளர் அலுவலகத்தில் 1974-இல் உரிமம் பெற்ற முகவரி மாற்றப்படாமலே இருந்தது; தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் பெயரிலேயே இருந்தது. 2018 இல் சிந்தனையாளன் வெளியீட்டு உரிமையை தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் மா.பெ பொ.க.வுக்கு ஓர் உறுதிமொழி ஆவணமாக எழுதிக் கொடுத்து விட்டார். அதன் அடிப்படையில் புதுதில்லியில் உள்ள செய்தி ஏடுகள் பதிவாளருக்கு பெயர் மாற்றம் செய்திட விண்ணப்பிக்கப்பட்டது. மா.பெ.பொ.க. ஓர் பதிவு செய்யப்பட்ட கட்சி அன்று என பெயர் மாற்றிட மறுக்கப்பட்டது.


தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் 6.04.2021 அன்று மறைந்துவிட்டார். புதுதில்லியில் உள்ள செய்தி யேடுகள் பதிவாளர் அலுவலகத்தில் சிந்தனையாளன் இதழ் உரிமம் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் பெயரிலேயே உள்ளது. ஆசிரியரும் வெளியீட்டாள ருமான தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் மறைந்து விட்ட நிலையில் சிந்தனையாளன் இதழைத் தொடர்ந்து நடந்த வேண்டுமென்றால், அவரின் சட்ட மரபுரிமையர் இனி இதழை நடத்திட உள்ளவர் பெயருக்கு உரிமத்தை மாற்றித் தர ஒப்புதல் அளித்திட வேண்டும். அவ்வாறு மரபுரிமையர் அனைவரின் ஒப்புதல் பெறுவதில் சில இயலாமைகள் உள்ள படியால் “புதிய சிந்தனை யாளன்” என்ற பெயரில் மாத இதழை வெளியிட புதுதில்லி இந்தியச் செய்தி ஏடுகள் பதிவாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

முறையான உரிமம் பெறப்படும் வரை “புதிய சிந்தனையாளன்” தனிச்சுற்றுக்கு என்ற முறையில் வெளியிடுகிறோம். எங்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்த தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் கொள்கை வழிநின்று, மார்க்சியப் பெரியாரிப் பொதுவுடைக் கட்சிக்காக - கட்சி கேட்டுக் கொண்டதற்கு இணங்கி ஆசிரியரும் வெளியீட்டாளருமாக வாலாசா வல்லவன் ஆகிய நான் இதழை வெளியிட முன் வந்துள்ளேன்.

வாசகர்கள் தங்கள் மேலான ஆதரவை நல்கிட வேண்டுகிறோம். கட்டுரையாளர்கள் தொடர்ந்து தங்கள் கட்டுரைகளை அனுப்பி இதழினைப் புரக்க அன்புடன் வேண்டுகிறேன்.

**வாலாசா வல்லவன்**
10.05.2022

## சிந்தனையாளன் 25 ஆம் ஆண்டு பொங்கல் 2022 மலர் வெளியீட்டு விழா மற்றும் தமிழரின் மொழி பண்பாட்டு மீட்ருவாக்க மாநாடு




**சிந்தனையாளன் 25ஆம் ஆண்டு பொங்கல் மலர் 2022 வெளியீட்டு விழா 20.2.2022 ஞாயிறு மாலை 5 மணிக்கு இணைய வழியில் சென்னை மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க்களத்தில் நடைபெற்றது. வாலாசா வல்லவன் தலைமையில் நடைபெற்றது இவ்விழாவில் காஞ்சி சி.நடராசன் வரவேற்புரையாற்றினார். தோழர் பொழிலன் மலரை வெளியிட்டு சிறப்புரை நிகழ்த்தினார். மாம்பலம் சந்திரசேகர் கலந்து கொண்டு ஆனைமுத்து அய்யாவுடனான தன் நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.**

**ந.கருணாகரன், லோ.இரத்தினகுமார், மா.முருகேசன், இரா. இரமணன், அ. சகாதேவன், கோ.மு. கறுப்பையா, இரா. பகுத்தறி வாளன், மீ.டில்லிபாபு, சம்பந்தம் சிவக்குமார் க.குப்புசாமி, நா.மதனகவி, செ. ஆனையப்பன், இரா.சிவப்பிரகாசம், முனைவர் ப. வெங்கடேசன், தொ. எழில்நிலவன், க.பன்னீர்ச் செல்வம், த.இளவரசன், தீ.கோபாலகிருட்டிணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.**

**தமிழரின் மொழி – பண்பாட்டு மீட்டுருவாக்க மாநாடு மா.பெ.பொ.க. பொதுச்செயலாளர் தி.துரைசித்தார்த்தன் தலைமையில் நடைபெற்றது. சா.குப்பன் வரவேற்புரை யாற்றினார். தோழர்கள் திருமுருகன்காந்தி, பேராசிரியர் சோம. இராசேந்திரன், இரா. திருநாவுக்கரசு ஆகியோர் கருத்துரையாற்றினார். சு.முருகவேள் நன்றியுரையுடன் மாநாடு இனிதே முடிவுற்றது.**

# பெரியாரிப் பேரறிஞர் தோழர் வே.ஆனைமுத்து

## நினைவலைகள் வெளியீடு – படத்திறப்பு – கருத்தரங்கம்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் சிந்தனையாளன் மாத இதழின் ஆசிரியராகவும் விளங்கிய ''பெரியாரியல் பேரறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின்'' படத்திறப்பு - நினைவலைகள் வேளியீடு-கருத்தரங்கம் நிகழ்வு 02.01.2022 அன்று மாலை 4.30மணிக்கு சென்னை, சேப்பாக்கம், செய்தியாளர் அரங்கில் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் மா.பெ.பொ.க. தலைமைக்குழு உறுப்பினர் சா.குப்பன் நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை வரவேற்றார். மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசாவல்லவன் தலைமையில் தமிழ்நாட்டு அரசு திட்டக் குழுவின் மேனாள் துணைத் தலைவர் - பொருளியல் வல்லுநர் - பேராசிரியர் மு.நாகநாதன் அவர்கள் தோழர் வே.ஆனைமுத்துவின் உருவப்படத்தைத் திறந்து வைத்து, நினைவேந்தல் நெகிழ்வுரையாற்றினார்.

அடுத்து ஒன்றிய அரசின் மேனாள் அமைச்சர் -தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் ஆ.இராசா அவர்கள் ''நினை வலைகள்'' மலரை வெளியிட்டார். 'நினைவலைகள்' முதல் படியினை ஒன்றிய மேனாள் இணையமைச்சர் தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்களும் தோழர் வே.ஆனைமுத்துவின் மூத்த மகன் தோழர் ஆனை.பன்னீர்செல்வமும் சூலூர் பாவேந்தர் பேரவை சூ.ந.பன்னீர்செல்வமும் பெற்றுக் கொண்டனர். அடுத்து தோழர் வே.ஆ.அவர்களின் மூத்த மகள் தமிழ்ச்செல்வியும் மருமகன் அரிமாப் பாண்டியனும் தோழர் க.முகிலனும் தமிழ்மறவர் கீ.வை.பொன்னம்பலனாரின் மகள் செந்தமிழ் கொற்றி யும் மற்றும் கட்சித் தோழர்கள் சிலரும் பெற்றுக் கொண்டனர்.

தோழர் வாலாசாவல்லவன் தலைமையுரையை அடுத்து ஆ.இராசா அவர்கள் தோழர் வே.ஆ.அவர்களின் கொள்கை உரம், மண்டல் குழு அமைப்பிலும் அதன் பரிந்துரைகள் செயலாக்கத்திற்கு வருவதிலும் அவரின் பங்குபணி பற்றியும் உரையாற்றினார்.

தொடர்ந்து திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர் களும் தோழர் க.முகிலனும் நிகழ்ச்சி நெறியாளுநரும் 'நினைவலைகள்' தொகுப்பாசியருமான முனைவர் முத்தமிழும் உரையாற்றினர். வாணியம்பாடி தோழர் நா.மதனகவி நன்றியுரையுடன் இந்த நிகழ்வு நிறை வுற்றது.

அடுத்த நிகழ்வான கருத்தரங்கத்திற்கு மா.பெ. பொ.க. பொதுச் செயலாளர் தி.துரைசித்தார்த்தன் தலைமை ஏற்றார். துணைப் பொதுச் செயலாளர் இரா.திருநாவுக்கரசு வரவேற்புரையாற்றினார். தி.துரைசித்தார்த்தன் தலைமையுரையைத் தொடர்ந்து, தன்னாட்சித் தமிழகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆழி செந்தில்நாதன் அவர்கள் ''தோழர் ஆனைமுத்துவின் குறிஇலக்கான கூட்டாட்சி அமைய..'' என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். நிறைவாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் ''வகுப்புரிமைப் போராட்டத்தில் தோழர் ஆனைமுத்து'' என்ற தலைப்பில் தோழர் வே.ஆ.அவர்கள் இட ஒதுக்கீட்டு உரிமைக்காக ஆற்றிய பணிகளை நிரல்படத் தொகுத்து நினைவுகூர்ந்தார். மா.பெ.பொ.க. அரியலூர் மாவட்ட அமைப்பாளர் தமிழ்க்களம் த.இளவரசன் நன்றி கூறலுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தது.



பேராசிரியர் மு.நாகநாதன் அவர்கள் தோழர் **வே. ஆனைமுத்து** அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்தார். முனைவர் முத்தமிழ் முழக்கம் எழுப்புகிறார்.



நினைவலைகள்
மலரைப் பெற்றுக் கொண்ட
திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்
ஆனை. பன்னீர்செல்வம்,
சூலூர் சூ.ந. பன்னீர்செல்வம்
வே.ஆ.அவர்களின்
மூத்தமகள் தமிழ்ச்செல்வி
உள்ளிட்டோர்.



பேராசிரியர்
மு.நாகநாதன்
அவர்கள்
நினைவேந்தல்
நெகிழ்வுரை
ஆற்றுகிறார்.



தோழர் வே.ஆ.
அவர்களின்
உருவப்படத்தினை
தோழர் வே. ஆ.
அவர்களின்
மூத்த மகள்
தமிழ்ச்செல்வியும்
அரிமாப் பாண்டியனும்
பெற்றுக்
கொள்கின்றனர்
உடன்
முனைவர் முத்தமிழ்.



நினைவலைகள்
மலரினை
வாணியம்பாடி
நா.மதனகவி
பெறுகிறார்.




தி.வி.க. தலைவர் கொளத்தூர் மணி
அவர்களுக்கு காஞ்சி சி.நடராசன்
நூல்கள் நினைவுப்பரிசு
அளிக்கிறார்.



தோழர் வே.ஆ.
நினைவேந்தல்
நிகழ்வில்
பார்வையாளர்கள்.



கருத்தரங்க நிகழ்வில் கலந்து கொண்ட தோழர்கள் கொளத்தூர் மணி, ஆழி செந்தில்நாதன், இரா. திருநாவுக்கரசு, தி.துரை சித்தார்த்தன், சா.குப்பன், க.முகிலன், வாலாசா வல்லவன், மீ.டில்லிபாபு, சி.நடராசன் உள்ளிட்டோர்.




நினைவலைகள் மலரினை செந்தமிழ்க் கொற்றி பெறுகிறார்.



நினைவலைகள் மலரினை அரியலூர் தமிழ்க்களம் தோழர் த.இளவரசன் பெறுகிறார்.

# இந்தி ஆதிக்கம் ஒழிய வழிதான் என்ன?

**வே.ஆனைமுத்து**

**தனிநாடானால் தமிழே போதும்!**

இந்தி ஆதிக்கம் ஒழிக்கப்படப் பலப்பல வழிகள் கூறப்படுகின்றன. அவரவர் கட்சி நிலைப்பாடு, அவரவர் ஆராய்ச்சி நிலைப்பாடு, அந்தந்த மாநில மக்களின் விருப்பம் என்கிற பல்வேறு அடிப்படைகளை வைத்து இந்தி ஒழிப்புப் பற்றிப் பேசப்படுகிறது.

திராவிடக் கட்சிகள் திராவிட நாடு, தமிழ்நாடு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று கோரின. தமிழகம் தனிச்சுதந்திர நாடு ஆன பிறகு அதற்கு இந்தி தேவை இல்லை; ஆங்கிலமும் தேவையில்லை; தமிழ் மட்டுமே போதும், இந்தி அப்போது ஒழிந்துவிடும்.

ஆனால், எல்லாத் திராவிடக் கட்சிகளும் நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட பிறகு இந்தியக் கூட்டாட்சி என்கிற இந்திய யூனியன் ஆட்சியின் கீழ்தான் தமிழ்நாடு இருக்கிறது; மற்ற திராவிடப் பகுதிகளும் இருக்கின்றன.

சமுதாயக்கண்ணோட்டத்தோடு மொழிஆராய்ச்சி வழிபட்ட சிலர், அரசியல் சட்டம் - ஏற்றுக்கொண்டுள்ள எல்லா மொழிகளும் 22 மொழிகளும் இந்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும் என்றே கோருகின்றனர். தி.மு.க., அ.தி.மு.க., தி.க.கட்சிகளின் நிலைப்பாடும் இதுவே ஆகும்.


‘இந்தி ஆட்சி மொழி’ என்பதன் முதல் அடிப்படை யானது, இந்தியா ஒரே தேசம் எனக் கொள்வதுதான், இது காந்தியார்காங்கிரசார் திட்டமாக, 1907க்கும் 1920க்கும் இடையில் வலிவாக உருவானது. இதற்கு முதலடி கொடுத்த நிகழ்ச்சிதான் 1938-39 இந்தி எதிர்ப்புப்போர்.

அதையும் மீறித்தான்1942க்குப்பிறகுவிடுதலைப் போராட்டத் தலைவர்கள் அனைவராலும் ‘இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி’ - இந்தியருக்குப் பொது மொழி’ என்கிற சிந்தனையும் அதற்கான முயற்சியும், காங்கிரசு கட்சியினரால் வலிவாகவே மேற் கொள்ளப்பட்டன. காங்கிரசு கட்சிக்குத்தான், அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றுகின்ற அவையில் பெரும் செல்வாக்கு இருந்தது. எவரும் தவிர்க்க முடியாத நிலயில் - இந்திதான் தேசிய மொழி அல்லது பொது மொழி என்பதற்குப் பதிலாக இந்திதான் ஆட்சி மொழி என்பது அரசியல் சட்டத்தில் இடம் பெற்றது. அதாவது இந்திய அரசின் அன்றாட அலுவல்கள் எல்லாம் இந்தியிலேயே நடைபெறும் என்று விதிக்கப்பட்டது.

1952க்குப் பிறகு திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் முன் வைத்த கோரிக்கை யினாலும், 1960களில் திராவிட முன்னேற்றக்கழகம் நடத்திய பெருங் கிளர்ச்சியினாலும் - இந்தி பேசாத மக்கள் விருப்புகிற வரையில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக நீடிக்கும் என்கிற ஆட்சி மொழிகள் சட்டம் (Act) நேரு காலத்தில் உருவானது.

இந்த ‘சட்டம் (Act)’ என்பது எளிதில் மாற்றப்படக் கூடியது; எனவே இந்த உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் ஏற்றிவிட வேண்டும்; அப்போதுதான் இந்தி பேசாத மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்பதும், அரசியல் சட்டம் ஏற்றுள்ள எல்லாப் பிராந்திய மொழிகளுமே ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும் என்பதும் இன்றைய தி.மு.க.வின் தெளிவான நிலைப்பாடு. அ.தி.மு.கவின் முடிவும் இதுவே ஆகும்.

இவை அனைத்துமே குழப்பமானவை என்பதும், தெளிவு இல்லாதவையே என்பதும் மக்களுக்குப் புரிய வேண்டும்.



எப்படி?

'ஆங்கிலமும் தொடர்ந்து இணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்று கோருகின்ற போது, எல்லா மொழிகளும் ஆட்சி மொழிகள் என்கிற கொள்கை தானாகவே அடிபட்டுப்போகிறது; அடிபட்டுத் தான் ஆக வேண்டும்.

**இந்தி பேசாதோர் இரண்டாந்தர மக்களே!**

"இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில்" என்கிற போது இந்தி பேசாத தமிழர், தெலுங்கர், கன்னடியர், கேரளியர், நாகாலாந்துக்காரர், அசாமியர், வங்காளியர், மராட்டியர் ஆகிய பல மாநில மக்களும் விரும்புகிற வரையில் என்பதுதான் பொருள். இவர்கள் எல்லோருக்கமாகச் சேர்த்து, ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்கிற கோரிக்கை வைக்கப்படுகிறது.

இந்த மாநிலங்களில் தமிழகம் தவிர்த்த வேறு எந்த ஒரு மாநிலத்திலாவது சட்ட மன்றத்தில் இப்படி ஒரு தீர்மானம் வந்ததா? இல்லை; இனிமேலும் அங்கு அப்படித் தீர்மானம் வருமா? வராது, ஏன்?

இந்த மாநிலங்களில், பெரும்பாலானவற்றில் மூன்று மொழிகள் படிப்புத் திட்டத்தை, முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. அத்திட்டத்தை அணுவளவும் பிசகாமல் பின்பற்றுகின்றன.

**இதன் பொருளென்ன?**

இந்தி பேசாத இந்த மாநிலங்களில் முப்பது வயதுக்கும் கீழ்ப்பட்ட - எழுதப் படிக்கத் தெரிந்த எல்லோருக்கும் இந்தி மொழி புரியும் என்பது பொருள்.

இம்மாநிலங்கள் சிலவற்றில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆண்டது; சனதாக் கட்சி ஆண்டது. அப்போதும் - தாய்மொழி, ஆங்கிலம், இந்தி இவை மூன்றும் கல்விக் கூடங்களில் கற்பிக்கப்பட்டன. இனியும் அவ்வாறே கற்பிக்கப்படும்.

எனவே, "இந்தி பேசாத மக்கள் எல்லோருக்கு மாகத்" திராவிடக் கட்சிகள் குரல் கொடுப்பது என்பது ஒரு நல்ல ஏமாற்று என்பது புரிய வேண்டும்.

அடுத்து இந்தியும் ஆங்கிலமும் ஆட்சிமொழிகள் ஆக்கப்பட வேண்டும் என்று மொழி ஆராய்ச்சியாளர் களும், மற்றும் இந்தியா ஒரே தேசமாக இருக்க வேண்டும் என்கிறவர்களும் கோருகின்றனர்.

**இதனால், இந்திக்காரர்களின் அரசியல் ஆதிக்கம் அல்லது இந்தி மாநிலங்களுக்குக் கிடைக்கும் முதல்நிலை இடம் எப்படி ஒழியும்?**

ஆட்சிமொழி என்பது நடுவணரசு, மாநில அரசுகளிடையே ஆன உறவுகள், நடுவண் ஆட்சி அலுவலகங்களின் நிர்வாகம், இந்திய அரசு வெளிநாடு களுடன் கொள்ளும் உறவுகள் இப்படி எல்லா நிர்வாகப் பணிகளுக்கும் உரியது; இந்திய உச்ச நீதிமன்ற நிர்வா கத்துக்கு உரியது; இன்னும் பல மட்டங்களில் இடம் பெறுவது.

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர் களுக்கு, இது தாய்மொழி- பாடப்படிப்பு மொழி - மாநில ஆட்சி மொழி என்பதால் மிக மிக எளிதில் கைவரப் பெற்ற - மேல் நிலையில் வைக்கத்தக்க இடத்தை மிக வலிவாகவே அவர்களுக்கு இந்தி தந்து விடும்.

இந்தி பேசாத மக்கள், இணை ஆட்சி மொழி என்பதற்காக ஆங்கிலத்தை ஒரு பாடமாக மட்டும் படித்து விட்டு, அதைக்கொண்டு எப்படி இந்திக்காரர்களுடன் எந்த ஒரு துறையிலும் போட்டி போட முடியும்? ஒருக்காலும் முடியாது.

ஆங்கிலத்தில் எவ்வளவு திறமை பெற்றுக் கொண்டாலும், அப்போதும் இந்திபேசாதோர் இரண்டாவது, மூன்றாவது தகுதி நிலையில்தான் இருப்போம். இதுவே உண்மை.

**அதாவது இந்தி ஆட்சி மொழி– ஆங்கிலம் இணை ஆட்சி மொழி என்கிற உரிமை வந்தாலும்; அதற்குப் பிறகும் இந்தி பேசாத மக்கள் எல்லோரும் இந்திய ஆட்சியில் இரண்டாந்தர – மூன்றாந்தர நிலையில் தான் இருப்போம்.**

இதை திராவிடக்கட்சியினரும் சரி மற்றவர்களும் சரி மறந்து விடக் கூடாது.

**ஆங்கிலம் என்பதும் கூடாது**

"இந்தியா துண்டுபடாமல் இருக்க. ஆங்கிலம் வேண்டும்" என்பது இன்னொரு சாரார் கூற்று. இலங்கையும், பர்மாவும் (1935), பாகிஸ்தானும் (1947) இந்தியாவிலிருந்து பிரிந்து போவதை, ஆங்கிலம் ஆட்சி மொழியினால் தடுக்க முடியவில்லை; தடுக்கவும் முடியாது.

உருது, பஞ்சாபி, இந்தி மொழிகளைப் பேசுகிற பாகிஸ்தான் இசுலாமியர்களிடமிருந்து வங்காளி பேசும் இசுலாமியர் பிரிந்து போவதை, உருது ஆட்சி மொழியினால் தடுக்க முடியவில்லை.

எனவே, இந்தியா துண்டு துண்டாக உடைந் தாலும் சரி, ஆங்கிலம் ஆட்சி மொழி என்பதும் கூடாது என்றால், அதுதான் சரியான முடிவாகும்.

"அறிவியல் ஆய்வு நூல்களைக் கொண்டதும், உலக அறிவுச் சாளரமாக இருப்பதும், உலக நாடுகளில் எல்லாம் பழக ஏற்றதும், ஆங்கிலமே" என்று கூறி, அத்தகைய ஆங்கிலமே நமக்கு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், என்பதும் இன்னொரு சாரார் கூற்று.

உலக நடப்பு அப்படி இல்லை. செருமானியன் பிரஞ்சுக்காரன், சப்பானியன் இன்று உலகையே ஆட்டிப் படைக்கிறான் - அறிவுத் துறையிலும், அறிவியல் முன்னேற்றத்திலும் அவர்களுக்கெல்லாம், ஆங்கிலம் பாடப்படிப்பு மொழியாகவும் (Medium) இல்லை; ஆட்சி மொழியாகவும் இல்லை, ஆனால் பல நாடுகளில் ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் (a subject) கற்றுக்கொள்கிறார்கள். நாமும் அப்படிக் கற்றுக் கொள்ளலாம். செருமனி, பிரெஞ்சு, இரஷியன். சப்பான் போன்ற மொழிகளைக் கூடக் நாம் கற்றுக் கொள்ளலாம். அதுவேறு.

**அப்படியானால், இந்தி ஒழிய வழியே இல்லையா?**

இதுவரை கூறியவற்றைக் கொண்டு இந்தி ஒழிக்கப்படுவதற்கான வழிகள் என்று பலகாலமும் நாம் கூறியவற்றில், மொழி அடிப்படையில் அந்தந்த நாடும் தனிச் சுதந்தர நாடாகப் பிரிந்து போனால் அல்லாமல், இந்தி அறவே ஒழிய வேறு வழி இல்லை என்பதுதான் உண்மை.

கி.பி. 2011க்குப் பிறகு இது நடந்தாலும், இந்த ஒரு நிலை ஏற்படுவதை, எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஏனெனில் மொழி ஆதிக்கம், மத ஆதிக்கம் என்பவற்றை எதிர்த்து அரசியல் சுதந்தரம், பொருளாதார விடுதலை பெற விரும்புகிற இன வழிப்பட்ட குமுறல்கள் ஆங்காங்கே தோன்றி வருகின்றன.

கடந்த 50 ஆண்டுகளில் செய்தித் தொடர்பு சாதனப் பெருக்கமும், போர்க்கருவிகளும் இராணுவ வியூகங்களும் மாறிவருகின்றன. உலகம் ஓர் நொடிக்குள் அழிக்கப்பட ஏற்ற அணு ஆயுதம் பெருக்கப்பட்டுவிட்டது. முதலாளித்துவ முகாம், சமதர்ம முகாம் என இருந்த இரண்டு உலக முகாம்களை சமதர்ம முகாம் சிதைந்துவிட்டது. முதலாளித்துவ முகாம் சிறு சிறு உலக நாடுகளை அமைதியற்ற நிலையில் வைக்கவும், சுரண்டுகளமாக ஆக்கவும் வழிவகுத்துக் கொண்டது. சின்னஞ்சிறு சுதந்தர நாடுகள் எளிதில் இதற்கு இரையாகும் நிலைமை வலிமைப்பட்டு விட்டது. தமிழ்நாடு இச்சூழலில் சுதந்தரம் பெறுவதும், சுதந்தரமாக இயங்குவதும் முடியாதது.

அப்படித் தனிச் சுதந்தர நாடுகளாகப்பெற வாய்ப்பில்லா இன்றைய நிலையில் - இந்தி ஆதிக்கம் ஒழியச் சரியான வழிதான் என்ன?

**இந்திய நாடாளுமன்ற அமைப்பு எப்படி உள்ளது?**

இந்தி தேசியமொழி, பொதுமொழி, ஆட்சிமொழி என்கிற சிந்தனை அரசியல் ஆதிக்கத்தை அடித்தளமாகக் கொண்டது. இது முற்றிலும் ஓர் அரசியல் ஆதிக்கச் சிக்கல்; இது வெறுமையான. தனிப்பட்ட ஒரு மொழிச்சிக்கல் அன்று. அதாவது,

1) இந்தியா ஒரு சுதந்திர நாடு; எனவே ஒரு இந்திய மொழிதான் இங்கு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்கிற தேசியச் சிந்தனை இதற்கு ஓர் அடிப்படை.

2) இந்தியா ஒரே தேசம் - ஒரே அரசியல் கூறு (Single Political Unit) என்பது இன்னொரு அடித்தளம்.

அரசியல்சட்டப்படிஇந்தியாஒருகூட்டாட்சி. ஆனால் அச் சட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தியா ஒரு ஒற்றை ஆட்சி (Unitary State) என்கிற தன்மையையும் உரிமை களையும் பற்றியே எழுதப்பட்டுள்ளது.

இந்த அரசியல் அமைப்புத் தன்மையை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஒற்றை ஆட்சி அமைப்பில் இந்திய நாடாளு மன்றம், இந்திய நிர்வாக அதிகார வர்க்கம், இந்திய உச்ச நீதித்துறை இவை இன்றைக்கு எந்த வடிவங்களில் இருக்கின்றனவோ இதை மாற்றினால் அன்றி “இந்தி ஆதிக்கம் ஒழியக் கூட” வழி இல்லை.

இந்திய அலுவல் மொழி (அல்லது அலுவல் மொழிகள் பற்றிய முடிவை நாடாளுமன்றம்தான் நிறைவேற்ற வேண்டும். இந்திய நாடாளுமன்றம் எப்படி உள்ளது? நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 545. இவர்களுள் 543 பேர் தேர்ந் தெடுக்கப்படுவோர்.

‘இந்தி அலுவல் மொழி’ என்பதற்கு இந்தி மாநிலக்காரர்களின் வாக்குகள் தானாகவே கிடைக்கும்.

| | |
|---|---|
| உ.பி.- உத்தரகண்ட் | 85 |
| பீகார் - சார்க்கண்டு | 54 |
| ம.பி. | 40 |
| ஒரிசா | 21 |
| மொத்தம் | 200 |

எடுத்த எடுப்பில், இந்த 200 உறுப்பினர்களும், இந்தி மட்டுமே அலுவல் மொழி என்பதற்கே வாக்களிப்பர்.

இராஜஸ்தான் 25, பஞ்சாப் 13, அரியானா 10 ஆக 48 பேரும் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டவர்களே.

மகாராட்டிரம் 48, ஆந்திரம் 42, கர்நாடகம் 28, கேரளம் 20 ஆக 138 பேரும் இந்தியை, முப்பது ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகளில் படிப்பவர்களே. எனவே இந்தி இந்தியாவின் அலுவல் மொழி என்பதை ஏற்றுக்கொண்டவர்களே.

தமிழகம் 39. திராவிடக் கட்சிகள் 1971 முதல் இந்திரா காங்கிரசுக்கு அடிமைப்பட்டு, நாடாளுமன்ற இடங்களில் 25க்கு மேல் காங்கிரசுக்கு விட்டுக் கொடுத்துவருபவை.

மேற்கு வங்கம் 42, வெளிப்பேச்சில் இந்தி எதிர்ப்பு என்றாலும் பள்ளிகளில் இந்தியைக் கற்பிக்கும் மாநிலமே இது.

அசாம் 14. இது ஈரட்டானது.

மொத்தத்தில், இந்தி அலுவல் மொழி என்பதை என்றுமே நீடிக்கச் செய்ய இன்றைய நாடாளுமன்ற அமைப்பு வடிவம் மிகப் பெரும் துணையாக உள்ளது. இந்த நிலைமை இருப்பதையும் நாம் அரசியல் சிந்தனையோடு கணக்கிட வேண்டும்.

பிராந்திய மொழிகள் ஆட்சி மொழியானால்.....

இதே நாடாளுமன்றத்தில், "அரசியல் சட்டத்தில் கண்ட எல்லாப் பிராந்திய மொழிகளும் ஆட்சி மொழிகள்" என்கிற கோரிக்கை முன்வைக்கப்பட்டால், "அவரவர் தாய்மொழிக்கும் அலுவல் மொழி அந்தஸ்து தகுதி கிடைக்கிறது." என்பதால் அனைத்து மாநிலத்து வரும் - அனைத்து மொழிக்காரரும் ஒருமித்து ஆதரவு தர வழி ஏற்படக்கூடும்.

இதிலும் கட்சிக் கொள்கை, கட்சிக் கட்டுப்பாடு, பாரத தேச சிந்தனை இவை குறுக்கிட இடமுண்டு.

"நடைமுறையில், 15 அல்லது 20 மொழிகள் எப்படி ஆட்சி மொழிகளாக இருக்க முடியும்?" என்பதை ஒரு பெரிய சிக்கலாக முன்வைக்கவும் இடமுண்டு.

**இவ்வகையில் நிர்வாக நடைமுறை பற்றிய சிக்கல்தான் என்ன?**

1) நாடாளுமன்றத்தில் அவரவர் தாய் மொழி யிலேயே உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டும். 22 மொழிக் காரர்கள் பேசும் போது உடனுக்குடன் மொழி பெயர்த்துக் கூற முடியும். ஆனால் எந்த மொழியில் மொழி பெயர்த்துக் கூறுவது? ஆங்கிலத்திலா? இந்தியிலா? இது ஒரு சிக்கல்.

2) ஒவ்வொரு மாநிலத்திலும் தொடர்வண்டி அஞ்சல், தந்தி, தொலைபேசி, வங்கிகள்.ஆயுள்காப்பு, பொதுக் கணக்குத் தணிக்கைத் துறை, வருமானவரி, இப்படிப்பட்ட நடுவண் அரசு துறைகள் உள்ளன. இங்கு அன்றாட நிர்வாகத்தில் எந்த மொழியைப் பயன்படுத்து வது? அந்தந்த மாநில ஆட்சி மொழியையா? இந்தியையா? ஆங்கிலத்தையா?

இந்தத் துறையினர் நடுவண் அரசுக்கு எழுதுவ தற்கு இந்தியைப் பயன்படுத்துவதா? ஆங்கிலத்தையா? அல்லது மாநில ஆட்சி மொழியையா? இது இன்னொரு சிக்கல்.

3) அனைத்திந்திய நிர்வாகத்துறைக் (INDIAN ADMINISTRATIVE SERVICE) கானவர்களைத் தேர்ந் தெடுப்பது நடைபெற வேண்டும். இதற்கு ஆங்கிலத்தில், இந்தியில்அல்லதுஅவரவர்தாய்மொழியில்-எதில்தேர்வு எழுதுவது என்பது அடுத்த சிக்கல். கோத்தாரி குழுவினர், அவரவர் தாய்மொழியில் இத்தேர்வுகளை எழுதப் பரித்துரைத்ததை, இந்திய அரசு ஏற்றுள்ளது உண்மை. ஆனால் நிர்வாகத்துறைப் பொறுப்புகளை ஏற்ற பின்னர் அந்தந்த அதிகாரியின் தாய்மொழி பயன்படாது; மற்ற அரசு துறைகளில் இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ தான் நிர்வாகத்தை நடத்திட வேண்டும்.

இது அடுத்த சிக்கல்

4) இந்திய உச்ச நீதி மன்றத்தில் எந்த மொழியில் அன்றாட அலுவல் நடப்பது என்பது இன்னொரு சிக்கல் மேலும் உள்ள சிக்கல்களைப் பற்றி நாம் ஆர அமர எண்ணி, விவாதித்து, வழிகளைக் காண்பதுதான் இன்று தேவை.

**இனி இது பற்றி எண்ணுவோம்.**

ஒருறுப்பு அரசு முறை உடைக்கப்பட வேண்டும்.

1) நாடாளுமன்ற நடவடிக்கை பற்றி நாம் பார்க்கும்முன் நாட்டின் அமைப்பு - மாநிலங்களின் அமைப்புப் பற்றிக் காணவேண்டும்.

பதின்மூன்று கோடி மக்கள் கொண்ட உ.பி. உத்திரகண்ட், ஏழு, எட்டு கோடி மக்கள் தொகை கொண்ட மகாராட்டிரம் - பீகார் - சார்க்கண்டு மத்தியப் பிரதேசம், ஆந்திரம்முதலானமாநிலங்கள்உடனடியாகமூன்றாகவும், இரண்டாகவும் பிரிக்கப்பட்ட வேண்டும். இதற்கான கோரிக்கைகளை முன்வைத்த இயக்கங்கள் ஆகாங்கே உள்ளன. இவற்றை ஊக்கப்படுத்தி, வலிமைப்படுத்தி வெற்றி ஈட்ட வேண்டும். உத்திரகண்ட், ஜார்க்கண்ட் முதலானவை புதிய மாநிலங்கள்.

2) நாடாளுமன்றத் தொகுதிக்கு வரையறுக்கப் பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கை மாநிலந்தோறும் ஒரே அளவினதாக இருக்க வழிசெய்ய வேண்டும். இன்று அப்படி இல்லை.

3) நாடாளுமன்ற மேலவையில் சிறிய மாநிலம், பெரிய மாநிலம் என்கிற வேறுபாடு இல்லாமல் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சரி சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இடம் பெற வழி உண்டாக்க வேண்டும்.

இவ்வாறாக, இன்றைக்கு இருக்கிற ஒருறுப்புத் தன்மை கொண்ட அரசு அமைப்பு முறையை, முதலில் நாம் உடைத்தாக வேண்டும்.

**மாநிலங்களுக்கே முழு அதிகாரம்**

**1)1919 ஆம் ஆண்டைய இந்தியச் சட்டம், 1935 ஆம் ஆண்டைய இந்தியச் சட்டம் இவற்றின் மூலம் மாகாணங்களுக்கு ஏற்கெனவே இருந்த சுதந்தரம் – 1947க்குப் பிறகு 'ஆக்ட்'களின் மூலமாகவும்,**

**1950க்கு பிறகு அரசியல் சட்டம் மூலமாகவும் பறிக்கப்பட்டு விட்டன.** அயல்நாட்டுத் தொடர்பு இராணுவம், நாணயம் போன்ற துறைகள் தவிர்த்த மற்றெல்லாத் துறைகளும், அந்தந்த மாநிலத்துக்கே முழு அதிகாரம் உள்ளவையாக இருக்க வேண்டும்.

2) இப்படிப்பட்ட கோரிக்கைகளைக் கொண்ட இயக்கங்களும், குழுக்களும் ஆந்திரம், தமிழகம், வடகிழக்கு மாநிலங்கள், பஞ்சாப் போன்ற பகுதிகளில் தீவிரமாக உள்ளன. இவற்றை வலிவுபடுத்தி, ஊக்கப்படுத்தி, இக்கோரிக்கைகள் நிறைவேற வழி காண வேண்டும்.

### நடுவண் அரசுத் துறையானாலும் அந்தந்த மாநில ஆட்சிமொழியே!

1) மாநிலந்தோறும் இன்று உள்ள ‘‘நடுவண் அரசுத் துறைகள்’’ என்பவை அனைத்திலும், அந்தந்த மாநில ஆட்சி மொழியிலேயே அனைத்து நிலை நிர்வாகமும் நடைபெற வழி காண வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழிலும், ஆந்திரத்தில் தெலுங்கிலும் - கர்நாடகத்தில் கன்னடத்திலும், கேரளத்தில் மலையாளத்திலும் இப்படி அந்தந்த மாநில ஆட்சி மொழியிலேயே அனைத்து நிலை நிர்வாகமும் நடைபெற வழி காண வேண்டும்.

2) 1946இல் மாகாண முதலமைச்சர் மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுஅமைக்கப்பட்டஅகில இந்தியநிர்வாக சர்வீஸ் (I.A.S) ஏற்பாட்டையும், 1951இல் நிறைவேற்றப்பட்ட அனைத்திந்திய சர்வீஸ் ஆக்டையும் அடியோடு இரத்துச் செய்து விட்டு அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., அய்.எஃப்.எஸ்., அய்.இ.எஸ். முதலான ஊழியத் தேர்வுத்துறைப் பதவிகள் அனைத்தும் மாநில அரசு பணித் தேர்வுத் துறை (P.S.C.s) களின் கீழ்க்கொண்டு வரப்பட வேண்டும்.

அந்தந்த மாநில ஆட்சித் துறைகளின் அனைத்து நிலை அதிகார வர்க்கமும் - பெரியார் அவர்கள் 1967 இல் சென்னைக் கோட்டையில், அன்றைய முதல்வர் சி.என். அண்ணாத்துரை அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் அறிவுறுத்தியது போல - அந்தந்த மாநில அரசினராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு, அமர்த்தப்பட வேண்டும்.

3) கல்வியின் எல்லா நிலைகளிலும், தேர்வுகளிலும் அந்தந்த மாநில ஆட்சி மொழியும், அவரவர் தாய் மொழியுமே பயிற்சி மொழியாகவும், தேர்வு மொழியாகவும் ஆக்கப் பெறல் வேண்டும்.

இவ்வளவு கடினமான - பன்முகங்கொண்ட, ஆனால் அடிப்படையான சிக்கல்களை நாம் எதிர் நோக்கியிருக்குறோம் என்பதை மூடி மறைத்து விட்டு, அல்லது வருங்காலத் தலைமுறையினருக்கு விட்டு விட்டு, அதற்குப் பிறகு இந்தியை (அ) இந்தி ஆதிக்கத்தை ஒழிக்கும் கிளர்ச்சியையும், நடவடிக்கையையும் எவர் மேற்கொண்டாலும், அதனால், கோரிய பயன்கிட்டாது.

**மாநிலங்களின் கூட்டரசு அமைந்தாலும்......**

மேலே கண்ட பன்முகச் சிக்கல்களும் தீர்க்கப்பட்ட பிறகும் கூட- இந்தியா ஒரு உண்மையான கூட்டாட்சியாக அமைக்கப்பட்ட பிறகும் கூட,

1) நாடாளுமன்றத்தில் நடவடிக்கைகளை நடத்துவது,

2) நடுவண் அரசுடன் மாநில அரசுகளும், தனிப்பட்ட குடிமகனும் மடல் போக்குவரத்து செய்வது.

3) உச்ச நீதி மன்ற நடவடிக்கைகளை நடத்துவது,

4) பிற உலக நாடுகளுடனும், உலக மன்றங்களுடனும் தொடர்பு கொள்வது.

ஆகியவற்றுக்கு ‘‘ஆட்சிமொழி எது?’’ என்கிற சிக்கல் இருக்கவே செய்யும்.

1) நாடாளுமன்றநடவடிக்கைகளில் உறுப்பினர்கள் உரையாற்றுவது அவரவர் தாய்மொழியிலேயே நடைபெறும். ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா மொழிகளிலும் அந்த உரை ஒரே நேரத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

நடுவண் அரசுக்கு மாநில அரசு எழுதும் மடல்களும், ஒவ்வொரு குடிமகனும் எழுதும் மடல்களும் அந்த மாநில ஆட்சி மொழியிலும், அவரவர் தாய் மொழியிலும் இருக்கும்.

**ஒரே நேரத்தில் பல மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்ய வலிமை வாய்ந்த கணினிக் கருவிகள் உள்ள இக்காலத்தில், நடுவணரசு நாடாளுமன்ற உரைகளை உடனுக்குடன் மொழி பெயர்ப்பதும். நடுவணரசுக்கு வரும் கடிதங்களுக்கு அந்தந்த மொழியிலேயே விடை எழுதுவதும் முடியாத ஒன்றன்று.**

2) உச்ச நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும், அயல் நாட்டுடன் மடல் போக்குவரத்துக்கும் ஆங்கிலம், இந்தி இரண்டும் தொடர்பு மொழிகள் என்கிற வடிவில் இருக்கும். ஆயினும் உச்சநீதி மன்றம் ஒரு குடிமகன் தன்தாய் மொழியிலேயே வழக்கிடவும், வாதாடவும் உரிமையுள்ள இடமாக இருக்க வேண்டும். இங்கும் பதிவு செய்வது, அச்சிடுவது என்கிற பயன்பாட்டுக்கு மட்டுமே ஆங்கிலம், இந்தி வேண்டப்படும்.

இதனால் ‘இந்தி ஆதிக்கம்’ பெரிய அளவுக்கு இத்துறையில் சரியும்.

**இந்தியா உடைந்தால் இந்தி ஒழியும்**

இந்தியை அடியோடு ஒழிப்பது என்பது "இந்தியா" என்றே ஒன்று இல்லாமல், ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி அரசியல் சட்டத்துடன் கூடிய தனித்தனிச் சுதந்தர நாடாக ஆவதனால் மட்டுமே முடியும்.

எனவே "இந்தி, ஆதிக்க ஒழிப்பு" என்பது மேலே சொல்லப் பட்டவாறு அரசியல் அமைப்புகளில் மாற்றம், மாநில வடிவங்களின் சீரமைப்பு, அனைத்திந்திய நிர்வாக அமைப்பின் ஒழிப்பு, எல்லாத் துறைகளுக்கும், ஆட்சிப்பணிக்கும் மாநில அரசு நிர்வாகத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் அமைப்பு; கூட்டாட்சித் தத்துவப்படி ஒவ்வொரு மாநிலத்துக்கும் நாடாளுமன்றத்தில் அவரவர் மொழியில் பேசிடும் உரிமை, என்கிற இத்தனை சாதனைகளுக்கும் பின்னரே ஈடேறக் கூடிய ஒன்றாகும்.

**இந்தியா உள்ளவரை......**

இத்துடன்கூட, இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள மொழிகள் பட்டியலில் ஆங்கிலமும், மற்றும் உரிமையும் தகுதியும் உள்ள இன்னுஞ்சில இந்திய மொழிகளும் சேர்க்கப்படவும், நாம் முயலவேண்டும்.

இந்தப் பன்முகம் கொண்ட சிக்கல்களை, இதில் அக்கறை கொண்ட இயக்கங்களும், கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை மக்கள் முன், எல்லா மாநிலங்களிலும், எடுத்து வைக்க வேண்டும்; மாநிலந் தோறும் கிளர்ச்சிகளும், போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

இன்னும் ஒரு தலைமுறைக் காலம் - முப்பது நாற்பது ஆண்டுகள் இந்தப் பணிகளிலேயே நாம் ஈடுபட்டாலும் சரியே - இவை நடைபெற்றால் அல்லாமல், இந்தி ஆதிக்கம் வருவதை நாம் என்றென்றும் தடுத்து நிறுத்தவே முடியாது.

'நாளை வருகிற பலாவை விட, இன்று கிடைக்கிற களாவே மேலானது', என்று நினைக்கிற அரசியல் பதவி வேட்டைக்காரர்கள் - குறிப்பாகத் திராவிடக் கட்சிகள், இன்று எடுத்து வைத்துள்ள நிலைப்பாடுகள் இந்தி ஒழிய - (அ) இந்தி ஆதிக்கம் அகல வழியாக மாட்டா.

இவர்கள் சில ஆண்டுகள் பதவிச் சுகம் பெறவும், அதே காலத்தில் இந்தி ஆதிக்கம் நம் தலைமேல் வலிவாக அமரவுமே இவர்களின் போக்கு பயன்படும்.

இந்தி ஆதிக்கத்தால் வருங்காலச் சமூகம் நசுக்கப்படுகிற போது, இவர்களையும் காறி உமிழ்ந்து விட்டு- இந்திய ஆட்சி அமைப்பையும் அடியோடு தூக்கி எறிந்து விட்டு, மக்களை விடுதலை அடையச் செய்கிற விடுதலைப் போராட்டங்களை அவர்கள் மேற்கொள் வார்கள் என்பதும், உறுதியாக அப்போது அதில் வெற்றி பெறுவார்கள் என்பதும் திண்ணம்.

**இந்தி அறவே ஒழிந்த இடம் அதுதான்!**

2011இல் மா.பெ.பொ.க. வெளியிட்ட இந்தி ஆதிக்கம் ஒழிய வழிதான் என்ன? என்ற சிறுநூல்

## 24.10.2021 அன்று கூடிய
## மா.பெ.பொ.க. பொதுக் குழுத் தீர்மானங்கள்

**24.10.2021 அன்று மாலை அம்பத்தூர் பெரியார் நாகம்மை அறக்கட்டளை வளாகத்தில் கூடிய மா.பெ.பொ.க. பொதுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் :**

**1) தோழர் தி.துரைசித்தார்த்தன் பொதுச் செயலாளராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.**

**2) மா.பெ.பொ.க.வின் ஏடான சிந்தனையாளன் மாத ஏட்டிற்கு தோழர் வாலாசா வல்லவன் ஆசிரியராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.**

**3) கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக தோழர் வாலாசா வல்லவன் அவர்களையும் மற்றொரு துணைப் பொதுச் செயலாளராக தோழர் இரா. திருநாவுக்கரசு அவர்களையும் பொதுக்குழு ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

**4) ஆசிரியர் குழுவையும், தலைமைக் குழுவையும் பின்னர் தேர்வு செய்வது என முடிவு செய்யப்பட்டது.**

**5) நவம்பர் 1 ஆம் நாளை தமிழ்நாடு நாள் விழாவாக சிறப்பாகக் கொண்டாவது என்று தீர்மானிக்கப்பட்டது.**

**6) தோழர் வே. ஆனைமுத்து அவர் களின் நினைவு மலரை பல வண்ண மலராக 02.01.2022 ஞாயிறு அன்று சென்னை செய்தியாளர் அரங்கில் வெளியிட முடிவு செய்யப்பட்டது.**

**7) சிந்தனையாளன் 2022 பொங்கல் மலரை இணைய வழியில் வெளியிடுவது எனமுடிவு செய்யப்பட்டது.**

**8) உறுப்பினர் சேர்க்கையும், உறுப்பினர் அட்டையையும் உடனடியாக மாவட்டச் செயலாளர்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.**


# புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது

கோவை மாவட்டம் சூலூர் எஸ்.வி.எல் நகரைச் சேர்ந்தவர் புலவர் செந்தலை ந.கவுதமன். இவர், கோவை பிஎஸ்ஜி சர்வஜன மேல்நிலைப்பள்ளியில் முதுநிலை தமிழ் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது சொந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அருகேயுள்ள செந்தலை எனும் ஊர். இவருக்கு தந்தை பெரியார், கவுதமன் எனப் பெயர் சூட்டினார். புலவர் தேர்வில் சென்னை பல்கலைக் கழகத்தின் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றவர். சூலூர் வரலாறு, பகுத்தறிவு இயக்கத்தில் பாரதிதாசன், பாவேந்தர் வாழ்வியல் அழகின் சிரிப்பு, கோவை கண்ட மொழிப்போர், விடுதலைப்போரில் கோவை, கல்வி காத்த கோவை உள்ளிட்ட 15 நூல்களையும், கவிதை, கட்டுரைத் தொகுப்புகளையும் இவர் படைத்துள்ளார்.

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் ‘கலை சொல்லாக்க வளர்ச்சி – மொழித் தூய்மை நோக்கு’ என்ற பொருளில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியுள்ளார். சூலூர் பாவேந்தர் பேரவை என்ற அமைப்பை நிறுவி, கடந்த 34 ஆண்டுகளாக பாவேந்தரின் கருத்துகளை பரப்பி வருகிறார்.

தமிழக அரசின் டாக்டர் இராதாகிருட்டிணன் விருது, கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ் சான்றோர் விருது உள்ளிட்ட விருதுகளை பெற்றுள்ளார். புலவர் செந்தலை ந.கவுதமனின் தமிழ் பணியை பாராட்டும் வகையில், சென்னையில் நடந்த விழாவில், அவருக்கு, பாவேந்தர் பாரதிதாசன் விருது மற்றும் பரிசுத்தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

செந்தலை ந.கவுதமன் அவர்கள் 1974இல் ஆனைமுத்து அய்யா பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் வெளியிட்ட காலம் முதலே உதவியாக இருந்து வருபவர். தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் எழுத்துகள் நூல் வடிவம் பெற்று 2012இல் “திருச்சி வே.ஆனைமுத்து கருத்துக் கருவூலம்” என்ற தலைப்பில் வெளிவர காரணமாக இருந்தவர். சூலூர் பாவேந்தர் பேரவை எப்போதும் மா.பெ.பொ.க. நிகழ்வுகளுக்கு உறுதுணையாக செயல்பட்டுவருகிறது. மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும், புதிய சிந்தனையாளன் இதழும் தமிழ்நாடு அரசின் விருதுபெற்ற புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்களை வாழ்த்தி மகிழ்கிறது.






சென்னையில் நடைபெற்ற விழாவில் புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களுக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருதை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்தார்.



டாக்டர். **பி.ஆர். அம்பேத்கர்**

# வாழ்க்கை வரலாறு

புதிய அளவில் புதுப் பொலிவுடன்

மறுபதிப்பு

**வெளியீடு : 2022, தன்**



ஆங்கில மூலம் : தனஞ்சய் கீர்

தமிழாக்கம் : க.முகிலன்

வெளியீடு

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600005

கைப்பேசி - 8668109047.

# அறிவு நாணயத்தின்
# அரிய இலக்கணம்
# அண்ணல் அம்பேத்கர்



அம்பேத்கர் ஓர் அறிவுக் கருவூலம், அம்பேத்கர் வாழும் காலத்திலேயே அவருடைய முழு வரலாற்றை எழுதி, அவரிடமே காட்டி அய்யங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டு, 1954 இலேயே அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டார் அறிஞர் தனஞ்சய்கீர். அம்பேத்கரை - அவரின் பல்துறை அறிவாற்றலை அவருடைய சாதனைகளை அறிந்திட ஏற்ற நூல்.

..... ..... .....

அறிவு இருள் சூழ்ந்த இந்தியாவில் தம் இடையறா முயற்சியால் மிக உயர்ந்த கல்வித் தகுதியைத் தேடிப்பெற்றார் அம்பேத்கர். அவர் பெற்றிருந்த செழுமையான அறிவுதான், எதிரிகளோடு மோதிட்ட அவருக்கு அற்றம் காக்கும் ஆற்றல் வாய்ந்த கருவியாகப் பயன்பட்டது. சமுதாயத்தில் சமஉரிமையும் அரசியலில் விகிதாசாரம் பங்கு உரிமையும், பொருளாதாரத்தில் தற்சார்பும் பெற்றாலொழிய இழிவாக நடத்தப்படுவதிலிருந்து மீளமுடியாது என்பதில் உறுதிப்பட நின்றார்.

பெரியாரிய அம்பேத்கரிய நெறியில் சமதர்ம - மதச்சார்பற்ற பிறவிவருண வேறுபாடு அற்ற பெண்ணடிமை ஒழிந்த புதிய சமுதாயத்தைப் படைக்கவேண்டும் என்ற உணர்வையும் உந்துதலையும் பெற அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்று நூல் ஒரு திறவுகோல் ஆகும்.

(வெளியீட்டாளர் உரையிலிருந்து)

**தோழர் வே.ஆனைமுத்து**

06.06.1992

## தமிழாக்கம் செய்த க.முகிலன் உரை...

இருபதாம் நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தில் பெருந்தலைவர்கள் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் முன்னணித் தலைவராக வாழ்ந்த அம்பேத்கரின் பெருவாழ்வோ ஒரு தன்மையில் மற்ற எல்லா தலைவர்களின் வாழ்வினையும் விஞ்சிநிற்கிறது.

சுயமரியாதைச் சுடரொளியாக, தன்னம்பிக்கையின் ஊற்றாக, அஞ்சாமையின் உறைவிடமாக, உயரிய கல்வியாளராக, சிறந்த பொருளியல் வல்லுநராக ஆற்றல்மிக்க எழுத்தாளராக, பேராசிரியராக, மக்கள் தலைவராக, சட்ட மேதையாக, சமத்துவவாதியாக, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை வீரராக வாழ்ந்த வரலாறு, டாக்டர். பி.ஆர்.அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு.

(மொழிபெயர்ப்பாளர் குறிப்பிலிருந்து)

**க.முகிலன்**
06.06.1992

### தலித் முரசு, ஏப்ரல் 2004.

விழிப்புணர்வு பெற்ற இந்தக் காலகட்டத்தில், அம்பேத்கரின் இலட்சியப்பாதையை நோக்கி நாம் செல்கிறோமோ என்று, சுயவிமர்சனத்திற்கு நம்மை ஆட்படுத்திக் கொள்வதற்கு இதுவே சரியான தருணம்.

..... ..... .....

1992 இல் தனஞ்செய்கீர் எழுதிய 'அம்பேத்கரின் வாழ்வும் பணிகளும்' 900 பக்கங்கள் கொண்ட நூல் மிக அருமையாக மொழிபெயர்க்கப்பட்டு, தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் பல்வேறு நிதிச்சுமைகளுக்கிடையே வெளியிட்டார். ஆனால் 12 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஓராண்டுக்கு 1000 படிகள் அச்சிட்டிருந்தாலே 10,000 நூல்கள் மக்களிடையே சென்றிருக்கும். ஆனால், நம் எண்ணிக்கை 1 கோடிக்குமேல் இருக்கிறது. தலித் இயக்கங்களும் அமைப்புகளும் இதைச் செய்யத் தவறியது ஏன்?

**தோழர் புனிதபாண்டியன்**


டாக்டர். **பி.ஆர். அம்பேத்கர்**

# வாழ்க்கை வரலாறு

புதிய அளவில் புதுப் பொலிவுடன்
மறுபதிப்பு

## முன் வெளியீட்டுத் திட்டம்



**அரைய (ராயல்) அளவு 800 பக்கங்கள்**
கெட்டி அட்டை - நல்ல தாள்
**விலை ரூ. 950/-**

**முன்பதிவு விலை ரூ. 700/-**

முன் பதிவு தொடக்கம் : 14.04.2022
முன் பதிவு கடைசி நாள் : 04.06.2022

முன்பதிவு செய்திட விரும்புவோர்

காசோலை / வங்கிமுறி வாலாசா வல்லவன் VALASAVALLAVAN என்ற பெயரில் அனுப்பவேண்டும்.

மின்னணு பணம் மாற்ற
வங்கி சேமிப்பு கணக்கு எண் :
**179101000001308**
IFSC : IOBA0001791
Indian Overseas Bank
Chepauk Branch
Chennai - 600 005
G-Pay : 86681 09047

**காசோலை / வங்கிமுறி / அஞ்சல்**
அனுப்பவேண்டிய முகவரி
**வாலாசா வல்லவன்**
துணைப் பொதுச்செயலாளர்
மாரக்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
2/12 சி.என்.கே. சந்து, சேப்பாக்கம்,
சென்னை - 600005.
கைப்பேசி - 8668109047.

மேலும் விவரங்களுக்கு
**86681 09047, 98947 28032, 88709 87546**

# 12.03.2022 அன்று கூடிய
# மா.பெ.பொ.க. பொதுக் குழு முடிவுகள்.

12.03.2022 காரிக் (சனி)கிழமை அம்பத்தூர் தாய்த் தமிழ் பள்ளி நடைபெற்ற மா.பெ.பொ.க. பொதுக் குழு முடிவுகள்.

**தீர்மானம் –1**

கட்சியின் கொள்கை ஏடாகிய சிந்தனை யாளன் இதழ் வெளியீட்டில் உள்ள சட்ட சிக்கல்கள் நீங்கும் வரை 'புதிய சிந்தனையாளன்' என்ற பெயரில் மாத இதழ் நடத்துவது என்று 2022 ஏப்ரல் மாதம் முதல் இதழ் வெளியிடுவது என்றும் இதழ் இந்திய செய்தி ஏடுகள் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் வரை தனிச்சுற்றுக்கு என இதழை வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்–2**

மேதை அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்று நூலினை 2022 மே இறுதி (அ) சூன் முதல் வாரத்தில் வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். தோழர் திருமாவளவன் அவர்களை அழைத்து வேலூரில் வெளியிடுவது என முடிவு செய்யப்பட்டது.

முன்பதிவு செய்து நூல் வெளியீட்டிற்கு நிதி திரட்டவும் முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம்–3**

கட்சியின் நிதியை கையாள நாட்டுடமை யாக்கப்பட்ட வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சேப்பாக்கம் கிளையில் கணக்கு தொடங்கி இயக்கவும் வங்கிக் கணக்கினை பொதுச் செயலாளர் தோழர் தி.துரைசித்தார்த்தன் மற்றும் துணைப் பொதுச்செயலாளர்களில் ஒருவரான தோழர் வாலாசா வல்லவன் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பில் இயக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்–4**

கட்சியின் இதழான புதிய சிந்தனையாளன் இதழுக்கு ஆசிரியர் குழுவினர் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆசிரியர் - வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழுவினர்**

1. க.முகிலன், 2. சா.குப்பன், 3. சி.நடராசன், 4. ந.கருணாகரன், 5. இரா.திருநாவுக்கரசு, 6. முனைவர். முத்தமிழ், 7. தி.துரைசித்தார்த்தன்

**தீர்மானம் –5**

மா.பெ.பொ.க. தலைமைக் குழு உறுப்பினர் களாக கீழ் கண்டோர் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1. தி.துரைசித்தார்த்தன், 2.வாலாசா வல்லவன், 3.இரா.திருநாவுக்கரசு, 4.க.முகிலன், 5.சா.குப்பன், 6. சி.நடராசன், 7.மோ.சி. சங்கர், 8.மா. முருகேசன், 9. க.குப்புசாமி, 10. மு.சாமிநாதன், 11. இரா.இரமணன், 12. நா.மதனகவி, 13. த. இளவரசன், 14. முனைவர் முத்தமிழ், 15. சீனு. சந்திரசேகரன்.

**தீர்மானம் – 6**

மா.பெ.பொ.க அரியலூர் மாவட்டச் செயலா ளராக தமிழ்க்களம் த. இளவரசன் அவர்களையும் கடலூர் மாவட்டச் செயலாளராக தோழர். இரா. இரமணன் அவர்களையும் திருவண்ணா மலை மாவட்டச் செயலாளராக மா.முருகேசன் அவர்களையும் புதுச்சேரி மாநிலச் செயலாளராக தோழர்.சீனு. சந்திரசேகரன் அவர்களையும் இப்பொதுக் குழு ஒரு மனதாக அமர்த்துகிறது.

**தீர்மானம் –7**

பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் பொறுப்பு நிரப்பப்படுவதற்கு கடந்த 11 மாதங்களில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படாத நிலையை சுட்டிக்காட்டும் இப்பொதுக்குழு இத்தேக்க நிலையை மாற்றிட ஆவன செய்யுமாறு அறங்காவலர்கள் கூட்டத்தைக் கூட்ட இப்பொதுக் குழு கேட்டுக் கொள்கிறது.

# போரும் வீழ்ந்து வரும் உலகப் பொருளாதாரமும்

பேராசிரியர் மு.நாகநாதன்

மனித வரலாற்றில் சமுதாயம் நாடு போன்ற அமைப்புகளில் அரசியல் தலைமை தோன்றியவுடன் போர்களும் முகிழ்த்தன. மன்னராட்சி முறை வலிமைப் பெற்றவுடன் போர்களும் பெருகின. தொன்மைகால போர்கள் வீரத்தின் அடையாளமாகப் போற்றப் பட்டன. மாவீரன் அலெக்சாண்டர் இன்றைய பஞ்சாப் பகுதிகளில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு போரிட்ட போது மக்களுக்குப் பெரும் உயிரிழப்பில்லை என்று கூறப்படுகிறது. போர்வாள், வேல், கேடயம் போன்ற ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டன. யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என்ற பிரிவுகளும் மெல்ல மெல்ல போரில் படைக்கலன்களாகச் செயல் பட்டன. மாமன்னர் அசோகர் நடத்திய போர்களில் பல ஆயிரக்கணக்கான படை வீரர்கள் மாண்டனர் என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. பௌத்தக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட மன்னர் அசோகர் இதற்கு பின்பு போர்களைத் தவிர்த்தார். பௌத்த நெறிகளை உலகெங்கும் எடுத்துச் சென்றார்.

உலகில் முதன்முதலில் சீனாவில்தான் 10ஆம் நூற்றாண்டில் நெருப்பை உமிழும் கைகளால் இயக்கப்படும் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் போர் களில் பயன்படுத்தப்பட்டன.

13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் ஐரோப்பிய நாடுகளில் துப்பாக்கி வடிவில் சிதறி வெடிக்கும் வகையில் ஆயுதங்கள் உருவாக்கப்பட்டன. மன்னராட்சி முறை ஐரோப்பாவில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய காலத்தில் இந்த ஆயுதங்கள் மென்மேலும் புதிய வடிவில் வடிவ மைக்கப்பட்டன. இருப்பினும் படைவீரர்களைத் தவிர்த்துப் பொதுமக்களுடைய உயிரிழப்பு குறை வாகவே இருந்தது.

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி முறைகள் பல வடிவங்களில் ஏற்பட்டாலும் உயிர்க்கொல்லி ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முறையும் கைவிடப்படவில்லை. நெப்போலியன் ஐரோப்பிய நாடுகளில் போர் புரிந்து பல நாடுகளை அடிமைப்படுத்தினார். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரசியாவின் மீதும் போர் தொடுத்தார். பல ஐரோப்பிய நாடுகள் இந்தப் போரினால் பெருமளவில் பொருளாதார இழப்புகளைச் சந்தித்தன.

பல ஆய்வாளர்கள் 13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்ற போர்களால் சில இலட்சம் கோடி ரூபாய் இழப்பும் பல இலட்சம் இராணுவ வீரர்களின் உயிரிழப்பும் ஏற்பட்டன என்று குறிப்பிடுகின்றனர். 18ஆம் நூற்றாண்டில் பொருளியல் அறிஞர் ஆதம் சுமித் ‘‘சுயாட்சியுடைய சமுதாய அமைப்புகளை ஆயுதங்களைப் பெருக்கி வன்முறை களையும் சீரழிவுகளையும் ஏற்படுத்துவதுதான் அரசினுடைய முதன்மையான பணியாக வளரத் தொடங்கியது’’ எனக் குறிப்பிட்டுள்ளார். அறவழிகளை முற்றிலும் புறந்தள்ளிப் போர் வழியாக பிற நாடுகளின் பகுதிகளைக் கைப்பற்றுவதே ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் முதன்மையான பணியாகப் போற்றப்பட்டது. பொதுச் செலவு என்பதே போர்ச்செலவு என வளரத் தொடங்கியது. இதைக் கண்டனம் செய்யும் வகையில் 18ஆம் நூற்றாண்டில் லியான் சே (Leon Say (1786)) என்ற பிரெஞ்சு நாட்டுப் பொருளாதார அறிஞர் பொதுச் செலவு என்பதே உலகம் தழுவிய தீமைகளில் ஒன்றானது என்றார். மேலும் பொதுச் செலவு என்ற நிதியியலில் சுட்டப்படும் அமைப்பு தேவையற்றது எனவும் கூறினார்.

வட்டார அளவில் இவ்வாறு பல போர்கள் நடந்தன. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடந்த போர்கள்தான் உலகப் போராக முதன்முதலில் வெடித்தது (1914-1918). ஐரோப்பிய நாடுகளுக்குள் நடந்த இந்தப் போரில் 3 கோடியே 74 இலட்சம் படைவீரர்கள் ஒரு கோடியே 30 இலட்சம் பொது மக்களும் உயிரிழந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பல இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டதால் போரைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1920இல் 42 நாடுகள் இணைந்து நாடுகளின் மன்றம் (League of Nations) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு உருவான பின்பு பல பன்னாட்டு வர்த்தக வணிகச் சட்டங்கள் உருவாயின என்றாலும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கப் போர் வெறியைத் தடுக்க முடிய வில்லை.

பல வியப்பான நிகழ்வுகளுக்கும் பற்றாக்குறை யில்லை. பெர்ட்ரண்டு ரசல் போன்ற அறிஞர்கள் போர்களுக்கு எதிராகக் களம் கண்டனர்; சிறை பிடிக்கப்பட்டனர். ஆனால் முதல் உலகப் போரின் போது இங்கிலாந்தில் இருந்த காந்தியார் அந்நாட்டிற்கு ஆதரவாக இந்தியர்கள் போர்ப்படையில் சேர வேண்டும் என வலியுறுத்தினார். போரில் பங்கு பெறுவது வீரம் என வர்ணித்தார். முதல் உலகப்

போரில் இங்கிலாந்து படையில் பங்குபெற்று 43 ஆயிரம் இந்தியர்கள் உயிரிழந்தனர். போர் முடிந்த சில மாதங்களிலேயே இங்கிலாந்து ஏகாதிபத்திய அரசுத் தனது இராணுவ அடக்குமுறைகளை இந்திய மக்களின் மீது ஏவி ஜாலியன் வாலாபாக் (1919) படுகொலையை நிகழ்த்தியது. காந்தியாரின் நெருங்கிய நண்பர் சார்லே ஆண்டுரூஸ் நான் தனிப்பட்ட முறையில் அவரின் இந்தச் செயலுக்கு ஒரு போதும் உடன்பட முடியவில்லை. மனவருத்தத்தோடு இந்தக் கருத்தில் அவரோடு வேறுபடுகிறேன் என்றார். காந்தியின் தனிச்செயலராகப் பணியாற்றிய மகாதேவ் தேசாய் காந்தியின் பிரித்தானியப் போர்ப்படை ஆதரவு தொடர்ந்து பல கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது உண்மை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலகப் போரினால் (1939-1945) உலகப் பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்தது. ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் உட்படப் பல நாடுகளில் இப்போர் மூண்டது. 2 கோடியே 50 இலட்சம் படைவீரர்கள் உயிரிழந்தனர் 2 கோடி மக்கள் பல நாடுகளில் ஏதிலிகளாகத் தள்ளப்பட்டு சொத்துகளையும் வீடுகளையும் இழந்தனர்.

இரண்டாம் உலகப் போர் முடிவடையும் காலக் கட்டத்தில்தான் ஐக்கிய நாடுகள் மன்றம் 1945இல் உருவானது. போரினால் ஏற்பட்ட பேரழிவுகள், உயிரழிவுகள், வள அழிவுகள், வாழ்வாதார அழிவுகள் மீண்டும் ஒரு போரினால் ஏற்படக் கூடாது என்ற உயரிய கொள்கை அடிப்படையில் தான் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை பிரகடனம் 1948ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. போர் முடியும் தருவாயில் மின்சாரத் துண்டிப்பு இருந்த காலக்கட்டத்தில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ரூஸ்வெல்ட்டின் துணைவியார் எலினார் ரூஸ்வெல்ட்டும் பிரான்சு நாட்டின் சட்ட இயல் அறிஞருமான ரெனே காசின் அவர்களும் பல வல்லுநர்களோடு கலந்தாலோசித்து இந்த அறிக்கையை எழுதினர். இரவிலும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் இவ்வறிக்கையை எழுத வேண்டுமா என்ற கேள்வியை பலர் கேட்டனர். சட்ட இயல் அறிஞர் ரெனே காசின் மனிதனுடைய இயல்பு மாறக்கூடியது; ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்லும் தன்மையைப் பெற்றது. எனவே இந்த அறிக்கையை விரைந்து எழுதி மானுட உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்க முற்படுகிறோம் என்றார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வட்டார அளவில் நடந்த பல போர்கள் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உயரிய நெறியைச் சிதைத்துவிட்டன. பல ஐரோப்பிய நாடுகள் தங்களின் ஆயுத வலிமையால் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை அடக்கி காலனிகளாக மாற்றிப் பெரும் பொருளா தாரச் சுரண்டலை 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தின. வடிவங்களாக மாறின. ஆதிக்கப் போக்கும் ஆணவப் போக்கும் இன்றும் தொடர்கின்றன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் கூட்டுப்பொறுப்பை முழு அளவிற்குச் சிதைத்து இம்மன்றத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் சில நாடுகள் வைத்தன. கட்டுப்படுத்தியுள்ளன என்பதே உண்மை.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பல்வேறு பொருளா தார, மருத்துவ, சமூக, குழந்தைகள் நலம், தொழிலாளர் நலன் போற்றுகிற அமைப்புகள் வெளியிடும் பல்வேறு அறிக்கைகளாலும் பல்வேறு துயர் துடைப்பு நடவடிக்கைகளாலும் இன்றளவும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தேவை இன்றியமையாததாக அமைந் துள்ளது. போருக்குப்பின் துயர்துடைக்கும் பணிகளையே இந்த அமைப்புகள் செய்து வருகின்றன.

சான்றாக 1950களில் வியட்நாம் மீது பிரான்சு நடத்திய போர்; 1960களில் அமெரிக்கா வியட்நாம் மீது நடத்திய போர்; 1980களில் நடந்த இரான்-ஈராக் போர்; லெபனான் போருக்கு இணையான பல உள்நாட்டுப் போர்களும் இந்த ஆதிக்க நாடுகளால் தூண்டப்பட்டு நடைபெற்றன.

1962இல் இந்திய சீன எல்லையில் நடைபெற்ற சண்டை, 1965, 1971, 1999ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற இந்திய - பாகிஸ்தான் போர்கள் 1990ஆம் ஆண்டுகளில் வளைகுடா போர்; 2009ஆம் ஆண்டு இலங்கை மண்ணில் தமிழர்களுக்கு எதிரான போர்; ஆப்கானிஸ்தான் போர் போன்ற பல போர்களினால் உலகளவில் பொருளாதார சரிவுகள் மக்களின் வாழ்விடங்களில் ஏற்பட்ட இழப்புகள் உயிரிழப்புகள் எண்ணிலடங்கா.

சான்றாக 2003இல் அமெரிக்கா ஈராக் மீது நடத்திய போரின் ஓராண்டுச் செலவை கணக்கிட்ட அறிஞர்கள் ஜோசப் ஸ்டிக்லி‘ லிண்டா ஜே.பிலிமசு ஆகியோர் ஓராண்டில் மட்டும் 150 இலட்சம் கோடி ரூபாயை அமெரிக்கா செலவிட்டுள்ளது என்று தங்களது நூலில் (The Three Trillion Dollor War) கூறியுள்ளனர். ‘‘அமெரிக்காவின் உயர் அதிகார மட்டத்தில் இருப்பவர்கள் அளித்த தவறான தகவல் களின் அடிப்படையில் இந்தப் போர் தொடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு அவையின் ஒப்புதலைப்பெறாமல் பன்னாட்டுச்சட்டங்களுக்குஎதிராக நடத்தப்பட்டபோர். பள்ளி இறுதித் தேர்வு எழுதக்கூடிய நிலை யில் உள்ள 18 வயதான இளைஞர்கள் ஈடுபடுத்தப் பட்டார்கள். ஹாலிபர்ட்டன் பிளாக் வாட்டர் செக்யுரிட்டி (Halliburton,BlackWaterSecurity)என்றஇரண்டுதனியார் ஒப்பந்தக்காரர்கள் அதிக அளவில் போர்ச் செலவை உயர்த்திப் பயன் பெற்றுள்ளார்கள். நாற்பதாயிரம் அடி உயரத்தில் இருந்து மக்கள் மீது விமானங்கள்

வழியாக எறி குண்டுகள் வீசப்பட்டன. உலக அளவில் இராணுவச் செலவிற்காகச் செய்யப்படுகின்ற செலவில் 47 விழுக்காட்டினை அமெரிக்கா மட்டுமே செய்தது" என்று இந்த அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

போர் என்பது ஆண்களையும் பெண்களையும் கொன்று குவிப்பதாகும். அவர்களை முடமாக்கிச் செயலிழக்கச் செய்யும் கொடுஞ்செயலாகும் இதற்கான செலவுகள் துப்பாக்கியின் கடைசிக்குண்டு வெடித்த பிறகும் தொடர்ந்து கொண்டே இருக்கும். (War is about men and women brutally killing and maidming other men and women. The costs live on long after the last shot has been fired - Three Trillion Dollor War : The True Cost of the Iraq Conflict, Jopeph Striglitz and Linda Bilmes, 2008. Penguin Publication, P.206) என்ற கருத்து இன்றும் உண்மையாகி விட்டதல்லவா?

இந்த நூல் வெளிவந்த பின்தான் அமெரிக்கா கொடுமையான முறையில் ஆப்கானிஸ்தானைத் தாக்கியது. இத்தகையப் போர்களால் அமெரிக்கப் பொருளாதாரம் சரிந்து ஏற்றத்தாழ்வுகள் பெருகி பொதுக் கடன் நாட்டினுடைய ஒட்டு மொத்த உற்பத்தியைவிடப் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

2022ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்துள்ளது. அதனுடைய அழிவுகளை அன்றாடம் தொலைக்காட்சியின் வழியாகக் காண முடிகிறது. நடை பெற்று வரும் இப்போரால் பொருளாதாரச் சீரழிவை உலகளவில் ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவில் சமையல் எரிவாயு உட்பட பெட்ரோலியப் பொருட்களின் விலை கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்து வருகிறது. 1990களில் உலகமயமாதல் என்ற திட்டத்தை நடைமுறைப் படுத்தி உலகளவில் முற்றுரிமை முதலாளித்துவத்தை (Monoply Capitalism) வளர்த்து விட்டது அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் என்பதுதான் உண்மை.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச்செயலாளராக இருக்கின்ற அன்டோனியோ கெட்டரஸ் (Antonio Guterres) 2020இல் நெல்சன் மண்டேலா ஆண்டு கருத்தரங்க உரையில் குறிப்பிட்ட கருத்து உற்று நோக்கத்தக்க தாகும். வரலாற்றில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது காலனி ஆதிக்கம்தான். உலகின் வடக்குப் பகுதியில் உள்ள நாடுகள் குறிப்பாக நான் சார்ந்த கண்டமான ஐரோப்பா அடக்குமுறையைக் கையாண்டு வன்முறை வழியாகத் தெற்கு நாடுகளின் மீது காலனி ஆதிக்கத்தைப் பல நூற்றாண்டுகளாகத் திணித்தது... உலகின் 50 விழுக்காட்டு மக்களின் மொத்த செல்வத்தை 26 பெரும் பணக்காரர்கள் தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டதனால் அப்பட்டமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன.



பொருளாதார நிலையற்றத்தன்மை ஊழல் நிதிச்சிக்கல்கள் பெருகிவரும் குற்றச்செயல்கள் உடல் நலிவுகள் மன உளைச்சல்கள் ஆகியன இந்த ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படுகிறது" என்றும் அன்டோனியோ குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் கொரானா பெருந்தொற்று உலகளவில் பரவி பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த கடுமையான மோசமான பொருளாதார நெருக்கடியிலும் பல நாடுகள் போர்ச் செலவினைக் குறைக்கவில்லை. உலக மக்கள் தொகை ஆய்வறிக்கையில் (2022) உலகில் அதிகமாக இராணுவத்திற்குச் செலவிடும் நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. வரிசைப் பட்டியலில் அமெரிக்கா சீனா இந்தியா ரஷ்யா இங்கிலாந்து சவுதி அரேபியா ஜெர்மனி பிரான்சு ஜப்பான் தென் கொரியா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த நிலையில் உள்ளன. இதில் கொடுமை என்னவென்றால் மற்ற 9 நாடுகள் இராணுவத்திற்குச் செய்யும் செலவுத் தொகையை மொத்தமாகக் கூட்டிக் கணக்கீடு செய்யும் போது அமெரிக்காவின் செலவுத் தொகை 77800 கோடி டாலர் ஆகும். இது மற்ற 9 நாடுகளின் கூட்டுத் தொகையான 73000 கோடி டாலரைவிட அதிகமாக உள்ளது. உலகில் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இடம் பெற்றுள்ள 193 நாடுகளில் இந்தப் பத்து நாடுகள்தான் இராணுவத்திற்காக அதிகம் செலவு செய்கின்றன. போர்ச் செலவை செய்யும் 10 நாடுகளின் பட்டியலில் உள்ள இந்தியா மற்ற வளர்ச்சிக் குறியீடுகளில் எந்த நிலையில் உள்ளது என்பதை ஆய்வது அவசியமாகிறது.

ஐக்கிய நாடுகள் முன்னேற்ற அமைப்பு ஆண்டு தோறும் வெளியிடும் மானுட மேம்பாட்டு அறிக்கையின்படி (2020) இந்தியா 189 உலக நாடுகளின் வரிசைப்பட்டியலில் 131ஆம் இடத்தில் உள்ளது.

உலகில் பட்டினி பசியால்வாடும் மக்கள் தொகையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்ட 116 நாடுகளின் வரிசைப் பட்டியலில் (2021) இந்தியா 101ஆம் இடத்தில் உள்ளது. மக்கள் மகிழ்ச்சியாக வாழும் 146 நாடுகளின் வரிசைப் பட்டியலில் (2022) இந்தியா

136ஆம் இடத்தில் உள்ளது. உலகில் வருமான செல்வ ஏற்றத்தாழ்வுகள் மிகுந்த நாடுகளின் பட்டியலிலும் இந்தியா மிக மோசமான நிலையில் உள்ளது. இவ்வறிக்கையின்படி இந்திய மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு மக்கள் 22 விழுக்காடு செல்வத்தை யும் சொத்துகளையும் அடுத்ததாக 10 விழுக்காடு மக்கள் 57 விழுக்காடு செல்வத்தையும் சொத்து களையும் பெற்றுள்ளனர். 50 விழுக்காட்டு மக்கள் 13 விழுக்காடு அளவிற்கே செல்வத்தையும் சொத்தை யும் பெற்று மிக மோசமான பொருளாதாரச் சூழலில் தவிக்கின்றனர்.

எனவே போர்களைத் தவிர்ப்பதும் போர்ச் செலவைக் குறைப்பதும்தான் உலக நாடுகளின் பொருளாதாரத்தை மட்டுமல்ல இந்தியாவின் பொருளாதாரத்தையும் வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்க முடியும். 2350 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியத் துணைக்கண்டத்தின் பஞ்சாபின் பகுதிகளை அலெக்சாண்டர் போர் தொடுத்துக் கைப்பற்றினார். அந்தப் போரின் போது சில சமணத் துறவிகள் மரத்தடியின் கீழ் அமர்ந்து தங்களது சீடர்களுக்குப் பாடம் கற்பிப்பதைப் பார்த்தார். சமணத் துறவியான டண்டமிஸைத் தன்னிடம் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். அப்படிச் சமணத் துறவி வரவில்லை என்றால் அவரது கழுத்து வெட்டப்படும் என்ற எச்சரிக்கையையும் அனுப்பினார். டண்டமிஸ் அலெக்சாண்டரைச் சந்திக்க முடியாது என மறுத்து விட்டார்.

''தங்கம், செல்வம் போன்றவற்றில் பேராசைக் கொண்டவர்கள்தான், விரும்புபவர்கள் தான் அலெக்சாண்டரின் மிரட்டல்களுக்கு அஞ்சுவார்கள்'' என துறவி கூறிவிட்டார். அலெக்சாண்டர் ஏதாவது கூற வேண்டுமென்றால் என்னிடம் வரட்டும் என டண்டமிஸ் குறிப்பிட்டார். இந்தச் சமணத் துறவியின் கருத்துகள் அலெக்சாண்டரைப் பெரிதும் வியக்கச் செய்தது. இதற்குப் பிறகுதான் சமணக் கருத்துகள் கிரேக்கத்திற்குச் சென்றன என்றும் இந்தியத் துணைக்கண்டத்தின் முதல் தூதர் ஒரு சமணத் துறவியின் சீடர் என்பதையும் 'இந்தியர்கள் : ஒரு நாகரிகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு' (Indians : A Breif Histroy of a Civilization) என்ற நூலில் ஆசிரியர் நமித் அரோரா குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வை நோபல் பரிசு பெற்ற இந்தியப் பொருளாதார அறிஞர் அமர்தியா சென் நீதியின் கருத்து (The Idea of Justice) என்ற நூலில் உலகத்தை வென்ற அலெக்சாண்டர் சமணத் துறவிகளிடம் 'ஏன் என்னைப் புறக்கணிக்கிறீர்கள்' எனக் கேட்டார். அதற்கு அலெக்சாண்டர் பெற்ற விடை நம்மை மலைக்க வைக்கிறது. நாங்கள் நிற்கின்ற இடத்தில் உள்ள நிலப்பகுதியைத்தான் பெற்றிருக் கிறோம். நீங்களும் எங்களைப் போன்ற மனிதர் தான். ஆனால் நீங்கள் உங்கள் இல்லத்தைத் துறந்து, பல ஆயிரம் மைல்களைக் கடந்து எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிறீர்கள். இதனால் யாருக்கும் நன்மை இல்லை. உங்களுக்கும் தொல்லை; மற்றவர்களுக்கும் தொல்லை. வெகு விரைவில் நீங்கள் இறந்து விடுவீர்கள். அப்போது உங்களைப் புதைக்கத் தேவையான இடம் மட்டுமே போதுமானதாகும் என்று சமணத் துறவிகள் சுட்டினர். இந்த நிகழ்வின் வழியாக அலெக்சாண்டர் சமணத் துறவிகளின் மீது பெரும் மரியாதையையும் தனக்கு எதிராகக் குறிப்பிட்ட கருத்தையும் ஏற்பதாகவும் தன் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அரியனிடம் குறிப்பிட்ட தாக அமெர்தியா சென் சுட்டியுள்ளார்.

''அலெக்சாண்டர் காலத்தில் என்ன நடந்திருக் கலாம் என்பதைவிட இவ்வித உரையாடல்கள் வழியாகவும் தொடர்புகள் வழியாகவும் ஆழமான மாற்றங்கள் இந்தியப் பண்பாட்டுத் தளங்களில் நிகழ்ந்துள்ளன என அறிஞர் அமெர்தியா சென் குறிப்பிடுகிறார். இந்திய இலக்கியம், நாடகம், கணிதம், வானியல், சிற்பக்கலை போன்ற பல துறைகளில் கிரேக்கத்தின் செல்வாக்கு ஏற்பட்டது என்பதையும் சென் குறிப்பிட்டுள்ளார்.

தொன்மை காலத்தில் அலெக்சாண்டர் என்ற மாபெரும் போர் வீரன் பின்பற்றிய உயர்ந்த பண்பாட்டு நெறிகளை வெளிப்படுத்துகிறது. உலக நாடுகளின் பலவற்றை கைப்பற்றிய அலெக்சாண்டர் கிரேக்கத்தின் மாபெரும் மெய்யியல் அறிஞரான அரிஸ்டாடிலிடம் மாணவராகப் பயின்றதால் மனித உயிரையும் மற்ற அழிவுகளையும் ஏற்படுத்தும் போர்களை விட உயர்ந்த நெறிகள் மானுடத்தை வாழ்விக்கும் என்ற கருத்தையும் ஏற்றார். ஆனால் இதற்கு நேர்மாறாக இன்றையப் போர்கள் மானுடத்தை அழிவின் உச்சத்திற்கு எடுத்துச் செல்கின்றன. அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நுணுக்கங்கள் போர் முனையில் மக்களைக் கொல்வதற்கு துணை போகின்றன. சுயநலத்திற்காகவும் இராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் தனியார் முதலாளி களின் நலன்களுக்காகவும் போர்கள் நடைபெறு கின்றன.

மக்களின் அழிவில் ஆயுத வணிகர்கள் செழிக்கின்றனர். பெரும்பான்மையான மக்களின் நலத் திட்டங்களைப் புறக்கணித்து இராணுவச் செலவினை முன்னிறுத்துகின்றனர். நாடுகளின் அமைதியைச் சீர்குலைக்கின்றனர். ''என்று தணியும் இந்தப் போர் வெறி? எப்போது மக்களுக்கு விடுதலை கிடைக்கும்?'' இதற்கு விடைகாணாமல் உலகில் மானுட வளர்ச்சி யையும் அமைதியையும் காண முடியாது.

# ஆளுநர் இரவியை மட்டுமன்று ஆளுநர் அமைப்பையே விரட்டியாக வேண்டும்!

**பொழிலன்**

திடுமென இன்றைக்கல்ல... கடந்த 1652இலிருந்து ஆளுநர்கள் என்போர் வந்தேறி அதிகாரிகளாக நம்மை ஆண்டு வருகின்றனர்.

எல்பின்ஸ்டன், நேப்பியர் பக்கிங்காம், கன்னிமரா, வெலிங்டன், தாடண்டர், ஸ்டான்லி - இந்தப் பெயர்களெல்லாம். சென்னையில் உள்ள இடத்தின் பெயர்கள் என்று கருதிவிட வேண்டாம். அவையெல்லாம் அன்றைய சென்னை மாநிலத்தை ஆண்ட ஆளுநரின் பெயர்கள். ஏறத்தாழ 85 ஆங்கிலேய ஆளுநர்கள் 1652 முதல் 1948 வரை ஆட்சி செய்திருக்கிறார்கள்.

1948இல் சர் கிருஷ்ண இராசேந்திர சின்னாஜி தொடங்கி, இன்றைக்கு 2022 இல் ஆர். என். இரவி வரை ஏறத்தாழ 25 ஆளுநர்கள் தமிழ்நாட்டை மேய்ந்திருக்கிறார்கள்.

ஆளுநருக்கு மாதத்திற்கு மூன்றரை இலக்கம் உருபா சம்பளமாம், அலுவலக அலுவலர்கள், பாதுகாவலர்கள், சென்னையிலும், உதகையிலுமான இரண்டு மாளிகையிலுமுள்ள ஏறத்தாழ 300 'ஏக்கரு'க் கானத் தோட்டத் தொழிலாளர்கள், மாளிகை இல்லப் பணியாளர்கள் என மொத்தத்தில் ஆயிரக்கணக் கானவர்களுக்கும் தமிழ் நாட்டு அரசே கொட்டி அழ வேண்டுமாம்.

இவையன்றி ஆளுநருக்கான வண்டிகளுக்கு கன்னெய் (பெட்ரோல்), வானூர்தி உள்ளிட்ட போக்குவரத்துச் செலவுகள் என எல்லாம் தமிழ்நாட்டின் தலையில்தான்.

**ஆளுநருக்கான அதிகாரங்கள்:**

ஆளுநர்களுக்கு ஏது அதிகாரம் அவர் ஓர் இழுவை முத்திரை (இரப்பர் ஸ்டாம்ப்) தானே என்பதாகக் கருதினால் அது தவறு.

* ஆட்சி நிலையில்,
* சட்டமியற்றும் நிலையில்,
* பொருளியல் வகைப்பாட்டு நிலையில்,
* நீதி (நயன்மை)த் துறையில்,
* எல்லாவற்றுக்கும் மேலாக விருப்ப அதிகாரம் (discretionary) நிலையில்

என்று எல்லா நிலைகளிலும் அதிகாரம் படைத்ததாகவே ஆளுநர் பொறுப்பு இருக்கிறது.

1. மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்களை ஆளுநர் நேரடியாகவோ தன் கீழுள்ள அதிகாரிகளின் மூலமாகவோ கவனிக்க முடியும் என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 154(1) பிரிவிலான சட்ட நெறி.

இதுபோன்றதான நிலைகளிலேயே எண் 163, 163(3), 167(1), (2), (3), 217 - ஆகிய நெறிமுறைகள் பல்வேறு வகையில் ஆளுநரின் அதிகாரங்களை விளக்குகின்றன.

2. சட்ட முன்வரைவு ஒன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபின், ஆளுநரின் இசைவிற்காக அது அளிக்கப்பட வேண்டும். தனது ஒப்புதல் அல்லது இசைவுக் காக அனுப்பப்பட்ட சட்ட முன்வரைவில் தனது இசைவை வழங்கலாம் அல்லது இசைவினை மறுக்கலாம், அல்லது குடியரசுத் தலைவரின் கருத்துக்கு அதை ஒதுக்கிவைத்து விடலாம்.

அதேபோல், பொருள் (நிதி) திட்ட சட்ட முன்வரைவைத் தவிர பிற எந்தச் சட்ட முன் வரைவையும், மீண்டும் மறுஆய்வு செய்ய வேண்டும் என ஆணையிட்டுச் சேர்த்து ஆளுநர் அந்தச் சட்ட முன் வரைவைச் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்பிவிடலாம் என்கிறபடியாகப் பல அதிகாரங்கள் ஆளுநருக்கு உண்டு என்பதை அறிய வேண்டும்.

3. பொருளியல் அதிகாரங்கள் என்கிற வகையில், ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் எந்த ஒரு பொருள் முன்வரைவையும், பண முன்வரைவையும் சட்ட மன்றத்தில் முன்மொழியக் கூடாது என்கிற வகையில் பொருளியல் அதிகாரமும் ஆளுநரின் பிடிக்குள் வைக்கப்பட்டிருப்பதை உணர வேண்டும்.

4. ஒரு மாநிலத்தின் ஆட்சி அதிகார எல்லைக்குட் பட்ட குற்றத்தைச் செய்த குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கவும், மாற்றவும், நிறுத்தி வைக்கவும், நீக்கிவிடவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மீது உசாவல் நடந்து கொண்டிருக்கும் போதோ, விசாரணை முடிந்து அவர் தண்டிக்கப்பட்ட பின்னரோ, எப்போது வேண்டுமானாலும் ஆளுநர் தன் அதிகாரத்தை நிறுவ முடியும். 15 நாள்களுக்கு ஒரு முறை மாநிலத்தின் நிலைபற்றிக் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அறிக்கை அனுப்ப வேண்டும். மாநிலத்தில் நெருக்கடி நிலையைக் குடியரசுத் தலைவர் நடைமுறைப்படுத்துவதற்குரிய நிர்வாக நிலை பற்றிய அறிக்கையைக் குடியரசுத்

தலைவர். கேட்கும்போது மாநில ஆளுநர் அனுப்ப வேண்டும் எனும் சட்ட நெறி 356 பிரிவுப்படி ஆளுநருக்கான அதிகாரங்கள் நிரம்ப உண்டு.

5. இவையன்றி, ஆளுநரின் விருப்ப அதிகாரங்கள் (discretionary) என்கிற பெயரில் நெறிவிலக்கு என்கிற அடிப்படையில் ஆளுநர் என்ன முடிவையும் முன்னெடுக்க முடியும்.

இவ்வகையில் எல்லாம் பார்க்கும்போது ஆளுநர் களுக்கு இருக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரங்களைக் காட்டிலும் கூடுதலானவை யாகவே உள்ளன.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான திட்டம் இருப்பது போன்று ஆளுநருக்கு எதிரான தீர்மானத்தைச் சட்ட மன்றத்தில் கொண்டு வர இயலாது. இது அவருக்கு உரிய அதிகப்படியான அதிகாரங்களைக் காட்டும்.

இந்த வகையில் எல்லாம் ஆளுநரின் அதிகார எல்லை மீறலைக் கண்டு ஆளுநர் என்பவரே தேவையில்லை என்பதான குரல்கள் 1960 முதற் கொண்டே எழுந்தன.

''ஆட்டுக்குத் தாடியும். நாட்டுக்கு ஆளுநரும்'' தேவையில்லை என்பதாக அண்ணா பகடி பேசினார்.

ஆளுநர் பொறுப்பே கூடாது என்று மறுத்தும், ஆளுநர் எங்கு வந்தாலும் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்றும், அவர் பங்கு கொள்ளும் கூட்டங்களை யெல்லாம் முழுமையாகப் புறக்கணிப்பது என்றும், அன்றைக்குத் தி.மு.க சார்பில் அறிவிப்பும் நடைமுறையும் இருந்தது. பின்னர் படிப்படியே விட்டு விட்டனர்.

1969-இல் கலைஞர் மு.கருணாநிதி முத லமைச்சராக இருந்த போது இராஜமன்னார் குழு என்ற ஒரு குழு உருவாக்கப்பட்டு இந்திய அரசு மாநில அரசுகளுக்கு இடைப்பட்ட அதிகாரங்களின் வரம்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அதன்படி ஆளுநர் இந்திய அரசின் முகவராகச் செயல்படக்கூடாது என்று மறுத் தனர். அந்தக் குழுவின் அறிக்கை 1974 இல் இந்திய அரசிடம் அளிக்கப்பட்டது. ஆனால் எவ்வகை ஏற்பையும் இந்திய அரசு செய்யவில்லை.

அதேபோல் நெருக்கடி கால ஆட்சிக்குப் பின்னர் இந்திய அரசால் உருவாக்கப்பட்ட சர்க்காரியா குழு வழி, ஆளுநர் பற்றிய சில அதிகார வரம்புகள், ஆளுநர் தேர்வு செய்யப்படுவதில் மாற்றங்கள் சொல்லப்பட்ட போதும், அவையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை..

தொடர்ந்து 2002-இல் வாஜ்பாய் ஆட்சியின் போது அரசியல் அமைப்புச் சட்டம் மறு ஆய்வு என்கிற பெயரில் அமைக்கப்பட்ட குழுவும், ஆளுநர் நேரடியாகச் சட்டமன்ற உறுப்பினர்களால்தாம் தேர்வு செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்தும் அக்கருத்தும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

2007-இல் 'பூஞ்சிக்குழு' என்கிற குழுவின் அறிக்கைபடி நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான அதிகாரம் உள்ளதுபோல் சட்டமன்றத்தில் ஆளுநருக்கு எதிராகவும் தீர்மானங்கள் கொண்டு வருகிறபடியான அதிகாரமும் இருக்க வேண்டும் என வலியுறுத்தியும் அதுவும் ஏற்கப்பட வில்லை. இந்திய அரசியல் சட்டம் இதுவரை 101 முறை திருத்தப்பட்டும் ஆளுநர் தொடர்பான அதிகாரங்களை மீளாய்வு செய்கிறபடியாக எந்தத் திருத்தத்தையும் இந்திய அரசு செய்திடவில்லை.

ஆனால், மக்கள் அதிகாரத்தையே தூக்கி வீசிடும்படி ஆளுநர் அதிகாரம் படைத்தவராக இருக்கிற கொடுமையைப் பார்க்க வேண்டும். மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட சட்டமன்ற அதிகாரத்தையே எந்தக் காரணமும் இல்லாமல் தன் விருப்பப்படி உடன்பாடு இல்லை என்கிற அடிப்படையில் 356-ஆவது பிரிவின் படி ஆளுநரால் கலைத்துவிட முடியும்.

இன்றைய அளவில் உள்ள சட்டமன்ற ஆட்சி அமைப்பு முறை எந்தளவு அதிகாரம் படைத்தது, அது யாருக்கானது என்பதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, இருக்கக்கூடிய அந்த அமைப்பு முறையையே கூட கலைத்து விடுகிற அதிகாரத்தை ஆளுநர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதே அவர்களின் உச்சநிலை அதிகாரத்தைக் காட்டும்.

இப்படியாக இதுவரை அதாவது கடந்த 70 ஆண்டுகளில் 128 முறை சட்டப் பிரிவு 356-இன்படி மொழித் தேச மாநிலங்களின் ஆட்சிகள் கலைக் கப்பட்டுள்ளன என்றால்-ஆளுநரின் அதிகார வெறிப் போக்கை உணர்ந்து கொள்ள வேண்டும்.

356 பிரிவு முதன்முதலாக சூலை 31,1959 அன்று கேரள மக்களால் தேர்ந்தெடுகப்பட்ட இந்திய பொதுவுடைமைக் கட்சி அரசைக் கலைக்கப் பயன்படுத்-தப்பட்டது. அதன் பிறகு 1953, 54, 56, 59 என வரிசையாக ஆட்சிக் கலைப்புகள் நடந்துகொண்டே இருந்தன, இருக்கின்றன...

1947 முதல் 64 வரை நேரு தலைமை அமைச்சராக இருந்த காலங்களில் 8 முறையும், 1977 முதல் 79 வரை மொராஜி தேசாய் தலைமை அமைச்சராக இருந்த ஒன்றரை ஆண்டில் பதினாறு முறையும்,

இந்திரா காந்தி தலைமை அமைச்சராசு ஆட்சி செய்த 16 ஆண்டுகளில் 50 முறைகளும் மாநில அரசுகள் கலைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 128 முறைகளில் 88 முறை காங்கிரஸ் ஆட்சியின் போது கலைக்கப்பட்டுள்ளது. அண்மையில் 2016-இல் அருணாச்சலப் பிரதேசத்தில் ஆளுநர் தேவிபிரசாத் ராஜ், கோவா மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைத்ததையும், அதே 2016 மார்ச் 27-இல் உத்தர கண்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைத்ததையும் உச்ச நீதிமன்றம் வெகு கடுமையாகக் கண்டித்ததை அறிந்திருப்போம்.

ஏற்கனவே: 1977-இல் இராசசுத்தான் மாநில அரசு கலைக்கப்பட்டதால் இந்திய அரசை உச்சநீதிமன்றத்தின் ஏழு பேர் கொண்ட அமர்வு மிகக் கடுமையாகக் கண்டித்து இருந்தது. அமீதுல்லா (உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி), சந்திர சூட், பி.என். பகவதி, கோசுவாமி, குட்டா, உன்ட் வாலியா, பாசலால் ஆகியோரின் அறிக்கையிலும் “இது பிரிட்டீசு ஆட்சியைப் போல் அல்லவா இருக்கிறது. இது போன்ற நடைமுறை இந்திய அரசியலில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அமர்வு இடித்துரைத்தது.

தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தடுக்கப்பட்ட அரசுகள் கலைக்கப்பட்ட நிகழ்வுகளும் கொடுமை யானவை. 1976இல் ஊழலின் பெயராலுல் தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டதும், பின்னர் 1991இலும் ஈழ ஆதரவுப் போக்கை காரணம் காட்டி தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதும் முற்றிலும் மக்களாட்சிக்கு எதிரானவை.

இன்னொரு கொடுமையையும் சொல்ல வேண்டும். அன்றைய ஆளுநர் பர்னாலா தி.மு.க. அரசைக் ககலைக்க வேண்டும் என அறிக்கையைத் தர மறுத்தும், குடியரசுத் தலைவர் தன் போக்காகத் தமிழ் நாட்டு அரசாட்சியைக் கலைத்த கொடுமையும் இந்திய மக்களாட்சியில் நடைபெற்றது.

ஆக, இப்படியாக ஆளுநர் அதிகாரவெறியின் அத்து மீறல்களின் தொடர்ச்சிதான் இன்றைய தமிழ்நாட்டு ஆளுநர் இரவி. பீகாரைச் சார்ந்தவர். அவர் தமிழ்நாட்டு ஆளுநராக வந்து ஆறு மாதத்திற்குள் (கடந்த பிப்ரவரியில்) அவரின் மகளின் திருமணத்தை உதகையில் ஏன் நடத்த வேண்டும்? பீகாரில் உள்ள உற்றார் உறவினரோடு பீகாரில் நடத்துவதை விட்டு விட்டுத் தமிழ்நாட்டில். உதகையில் உள்ள ஆளுநர் மாளிகையில் அவரின் உறவுக்கூட்டம் வந்து கொட்டமடிக்க தமிழ்நாடு என்ன திறந்த மடமா? ஆண்டாண்டுக் காலமாக வெள்ளை வண்ணப் பூச்சிலிருந்த உதகை ஆளுநர் மாளிகையைத் திருமணத்திற்காகப் பல இலக்கம் செலவில் பச்சை நிற வண்ணப்பூச்சில் மாற்றினார். எதற்காக? இந்த ஆண்டு பிப்ரவரி 21, 22 ஆகிய இரு நாள்களும் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றதால் உதகையில் ஆளுநர் மாளிகை முழுவதும் புதுப்பிக்கப்பட்டதாம்.

திருமணத்துக்காக ஆளுநர் மாளிகை தோர ணங்கள், நுழைவு வாயில்களில் தென்னங் கீற்று, வாழை, பாக்கு மரங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டனவாம். திருமணத்துக்கு வந்த விருந்தினர்கள் பாதுகாப்புக் காரணமாக உதகை தனியார் விண்மீன் தங்கும் விடுதிகளில் தங்கவைக்கப்பட்டனராம். திருமணத்தை முன்னிட்டு ஆளுநர் மாளிகையின் சுற்று வட்டார பகுதிகளில் மூன்று அடுக்குப் பாதுகாப்புப் போடப்பட்டது. உதகையில் உள்ள அரசு தாவரவியல் பூங்காவிலேயே தற்காலிக ஆய்வுச் சாவடி அமைக்கப்பட்டு, வண்டிகள் தணிக்கை செய்யப்பட்டன. திருமணத்திற்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மற்றபடி ஆளுநர் மகள் திருமணம் பற்றிய நிகழ்ச்சி பெரிய அளவில் செய்தியும் வெளியாக வில்லை. படங்களும் வெளியாகவில்லை, அந்தக் கமுக்கங்களுக்குள் வேறு என்னென்ன செய்திகள் உள்ளன என்பது வெளிவரவில்லை!

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, இதுநாள்வரை இருந்த ஆளுநர்களைவிட கூடுதலான வன்ம உணர்வினராகவும் வாய்ப் பேச்சு அதிகப்படியான வருமாகவே ஆளுநர் இரவி இருக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே... திருக்குறளை வேதத்தின் சாரம் என்று அவர் திருக்குறளைப் படிக்காம லேயே பிதற்றியிருப்பதும்... தமிழ்நாடு வளரக் கூடாது, இந்தியாதான் வளரவேண்டும் எனும் பொருள்பட பேசியிருப்பதும்... நீட் உள்ளிட்ட தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் 19 முன்வரைவுத் தீர்மானங்களை நிறைவேற்ற தடைசெய்கிற வகையில் செயல்பட்டு வருவதும். ஆளுநர் இரவி செய்திருக்கிற அல்லது செய்யாதிருக்கிற திமிர் செயற்பாடுகள் என்றே குறிப்பிட வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் காரணம் ஆளுநர் என்கிற அதிகார வெறிப்பொறுப்பே ஆகும். எனவே, ஆளுநர் இரவியை மட்டுமன்று, ஆளுநர் பொறுப்பையே விரட்டியடிக்கத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந் தாக வேண்டும். தமிழர்கள் தங்களுக்குள் உள்ள பிற முரண்பாடுகளையெல்லாம் தள்ளி வைத்து விட்டு இந்தியப் பார்ப்பனியத்திற்கு எதிராய் அணி சேரவேண்டிய நேரம் இதுவல்லாமல் வேறெதுவாக இருக்க முடியும்?



# தொழிலாளர் தோழர் அம்பேத்கர்

**இரா.திருநாவுக்கரசு**

மேதை அம்பேத்கர் அறிவுரைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவராகவும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் தலைவராகவும் மட்டுமே பார்க்கப்படும் தன்மைதான் இந்திய வெகுமக்களின் உளவியலில் உறைந்து கிடக்கின்றது.

இந்திய மக்களின் சமூக, அரசியல், பொருளாதார விடுதலைக்காக ஓயாது சிந்தித்து உழைத்த மேதை அம்பேத்கரை இந்தியச் சமூகம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

அம்பேத்கர் எழுதிய முதல் நூலான ‘இந்தியாவில் சாதிகளின் தோற்றம், வளர்ச்சி, அதன் அமைப்பியக்கம்‘ பிறகு ‘சாதி ஒழிப்பு’, ‘சூத்திரர்கள் யார்?’ இவையெல்லாம் இந்திய வெகுமக்களுக்காகத்தானே எழுதினார்! அப்படியானால் அம்பேத்கர் வெகுமக்களின் தலைவர் என்றுதானே பொருள்!

‘‘உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்’’ என்று மார்க்சு சொல்லும்போது உலக தொழிலாள வர்க்கத்தினர் இன்று வரை அவரை பிரித்துப் பார்க்க வில்லை. இனம், மொழி, நிற, நில வேறுபாடுகளைக் கடந்து மார்க்சை கொண்டாடிக் கொண்டிருக்கினறனர். ஆனால் இந்தியச் சூழலில் தொழிலாளர் உரிமை களுக்குத் தீர்வு கண்ட மேதை அம்பேத்கரை கொண்டாட மனம் இல்லையே ஏன்?

உலக நாடுகளின் உயர்ந்த பல்கலைக்கழகங் களில் படித்து, தேனி போல தேடித் தேடித் திரட்டிய அரசியல் அறிவை பெற்றுக் கொண்டு இந்தியாவிற்கு வந்த பின், அந்த அறிவை நமது நாட்டு மக்களின் மேம்பாட்டிற்குத்தான் மேதை அம்பேத்கர் தொடர்ந்து பயன்படுத்தினார்.

நிலமற்றவர்கள், ஏழை நில குத்தகையாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் உடனடி தேவைகள், துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றிற்குத் தீர்வு காணுகின்ற வகையில் ஓர் சீரிய வேலைத் திட்டத்தை உருவாக்கும் வகையில், 1936இல் ‘சுதந்திரத் தொழிலாளர் கட்சி ‘ (Independent Labour Party) என்ற கட்சியை உருவாக்கினார்.

‘‘தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தல், நீக்குதல், பதவி உயர்வு அளித்தல் ஆகியவற்றை நெறிப்படுத்துதல்; தொழிலாளர் வேலை செய்யும் நேரத்தின் அளவை நிர்ணயித்தல், நியாயமான கூலி பெற வழி காணல், ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளித்தல், தொழிலாளர்களுக்கு மலிவானதும் தூய்மையானதுமான முறையில் குடியிருப்புகள் அமைத்தல், வேலையற்றோர்க்குத் தரிசு நிலங்களை வழங்குதல், மேலும் அவர்களை மராமத்து பணிகளில் ஈடுபடுத்துவது மூலம் வேலை யின்மையை ஒழிக்க முடியும்‘‘ - என அக்கட்சியின் அறிக்கை அமைந்திருந்தன.

1937இல் பம்பாய் மாகாணச் சட்ட மன்றத்தில் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட போது, நில குத்தகை யாளர்களின் கொத்தடிமை நிலையை ஒழிக்க வேண்டும் என தீர்மானத்தை கொண்டு வந்தார். ‘

நம்மை சுரண்டிக்கொண்டிருக்கும் முதலாளி களுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்டி ஒரு முன்னணியை அமைக்க வேண்டும் எனவும் சுரண்டு வோரின் செல்வ செழிப்பில்தான் தொழிலாளர்களின் உழைப்பு குவிந்திருக்கிறது. எனவே, சாதி, இன வேறுபாடு கருதாமல் தொழிலாளர்களை ஒன்று திரட்டி ஓரணியில் நின்று போராடுவதே வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வழியாகும் என தொழிலாளர் சிந்தனையைத் தூண்டினார்.

நம்நாட்டில் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராக இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒன்று பார்ப்பனீயம், மற்றது முதலாளித்துவம். அதனால்தான் தொழிலாளர் வாழ்க்கையில் பொருளாதாரம் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும் தொழிலாளர்களைக் கிளர்ந் தெழ வைத்தார். தொழிலாளர் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். அதற்கு தொழிலாளரிடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கும் பார்ப்பனீயத்தை அடியோடு கிள்ளி எறியவேண்டும் என்று விளக்கினார்.

தொழிலாளர் வேலைநிறுத்தம் என்பது உரிமையை நிலைநாட்ட செய்யப்படும் ஒரு வழியாகும். அது தொழிலாளரை அடிமை போல நடத்துவதைத் தண்டிக்கின்ற ஒரு முறையாகும். தான் விரும்புகிறத் தன்மையில் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுதந்திரமாக ஒருவர் வேலை செய்வதற்கான உரிமையை அடைய மேற்கொள்ளளப்படுவதே வேலை நிறுத்தமாகும் என்றும், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான உரிமையை ஒரு புனிதமான உரிமை என்று காங்கிரசார் கருதுவதைப் போலவே வேலை நிறுத்தம் செய்யும் உரிமையும் புனிதமானதாகும் என்று 1938ல் பம்பாய் மாகாண சட்டசபையில் தொழில்

தகராறு மசோதா விவாதத்தின்போது அம்பேத்கர் தனது நிலைபாட்டை தெளிவாக விளக்கியுள்ளார்.

1942இல் வைசிராய் நிர்வாக அவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக அம்பேத்கர் பொறுப்பேற்றபோது பல பத்திரிகைகளும் வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவித்தன. இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தொழிலாளர் நல சட்டங்களை ஆழமாக கற்றறிந்தவர் என்பதுதான் இந்த பதவிக்கு அம்பேத்கரை தேர்ந்தெடுத்தற்குக் காரணம் என்று கூடச் சொல்லலாம்.

அமைச்சரான பிறகு பாராட்டு விழா ஒன்றில் பேசும்போது, "நான் ஏழையாக பிறந்து, ஏழைகள் மத்தியில் வளர்ந்தவன். ஏழைகளைப் போலவே ஈரமான தரைமேல் சாக்குப்பையைப் போட்டு அதன்மீது படுத்து உறங்கியவன். அவர்களுடைய துன்பங்களில் பங்கேற்றவன். ஆகவே, என்னுடைய போக்குகளிலிருந்து என்றும் நான் மாறமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். டெல்லியிலுள்ள என் வீட்டின் கதவுகள் என் நண்பர்களுக்காக என்றும் திறந்தே இருக்கும். மேலும், இந்தியாவிலுள்ள உழைப்பாளி மக்களின் நலன்களை பாதுகாக்கவும், உயர்த்தவும் நான் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் ஒருபோதும் பணிந்து போக மாட்டேன்" என உறுதியளித்தார்.

வைசிராய் நிர்வாக அவையிலே தொழிலாளர் நலத்துறை அமைச்சராக அம்பேத்கர் வீற்றிருந்தாலும் அவர் தன்னை ஒரு தொழிலாளர் தலைவராகவே கருதிக்கொண்டு செயல்பட்டார். இந்திய பரப்பெங்கும் சுற்றுப் பயணம் செய்து தொழிலாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் துயரங்களையும் வாழ்வியல் முறைகளையும் அறிந்து கொண்டார். குறிப்பாக இந்தியப் பெண்கள் படும் வேதனைகளைப் புரிந்து கொண்டார். பிறகு தனது பதவியை பயன்படுத்தி அதற்கான சட்டபூர்வமான தீர்வுகளையும் கண்டார்.

மேதை அம்பேத்கர் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது தொழிலாளர் தமது துயரங்களுக்குத் தீர்வுகாண அவரிடம் எவரும் மனு எதுவும் கொடுத்ததில்லை. தமது பிரச்சனைகளுக்காக போராடியதில்லை. மனித உயிர்கள் மாண்டதில்லை. இரத்த ஆறு ஓடவில்லை. ஆனாலும் தாயுள்ளத்தோடும் தந்தையுள்ளத்தோடும் தன்னிச்சையாக தொழிலாளர் நலன் பயக்க 28 மசோதாக்களை நிறைவேற்றினார். அவை;

1. சம வேலைக்கு பாலின பேதமற்ற சம ஊதியம்.
2. தொழிலாளர்களில் 12 மணி நேரம் வேலை நேரத்தை நீக்கி 8 மணி நேரம் வேலை திட்டத்தை நடைமுறைப் படுத்துதல்.
3. முத்தரப்பு தொழிலாளர் மாநாட்டை நடத்தி அந்த திட்டத்தை அமுல்படுத்துதல்.
4. சுரங்க பெண் தொழிலாளர்கள் மகப்பேறு நலத்திட்டம்.
5. பெண் தொழிலாளர் நலநிதி
6. பெண்கள் மற்றும் குழந்தைகள் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம்
7. பெண் தொழிலாளர் மகப்பேறு நலத்திட்டம்
8. நிலக்கரி சுரங்கங்களில் நிலத்தடி வேலை திட்டத்தில் பெண்கள் வேலை வாய்ப்பு குறித்த தடை மீட்பு.
9. தொழிற்சங்கங்களை கட்டாயமாக அங்கீகரித்தல்.
10. தேசிய வேலை வாய்ப்பு மையங்கள்.
11. ஊழியர் அரசாங்க காப்பீட்டுத் திட்டம்
12. குறைந்த பட்ச ஊதிய திட்டம்.
13. நிலக்கரி மற்றும் மைகா சுரங்கங்கள், வருங்கால வைப்பு நிதித்திட்டம்.
14. தொழிலாளர் சேம நல நிதித் திட்டம்.
15. தொழில்நுட்பப் பயிற்சி திட்டம் மற்றும் திறன் தொழிலாளர் திட்டம்.
16. மகப்பேறு நலச் சட்டம்.
17. அகவிலைப் படி
18. தொழிற்சாலை தொழிலாளர் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்கள்.
19. தொழிற்துறை ஊழியர்களுக்கான சுகாதாரக் காப்பீடு.
20. சட்டபூர்வ வேலை நிறுத்தம்.
21. வருங்கால வைப்பு நிதி திட்டம்
22. ஊழியர்கள் சம்பள உயர்வு மீளாய்வு செய்தல்
23. இந்திய தொழிற்சாலை. சட்டம்.
24. இந்திய தேயிலை கட்டுப்பாட்டு மசோதா.
25. இந்திய தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான வீட்டு வசதி திட்டம்.
26. மோட்டார் வாகனங்கள் (ஓட்டுநர்) மசோதா.
27. தொழிலாளர்கள் மறுவாழ்வு திட்டம்.
28. தொழிலாளர் இழப்பீடு (திருத்த) சட்டம்.

இந்திய தொழிலாளர்கள் இன்றைக்கு அனுபவிக்கும் இத்தனைச் சட்டங்களையும் அன்றைக்கே கொண்டு வந்த அம்பேத்கரை இந்திய சமூகம் அவ்வளவு எளிதில் கடந்து போக முடியுமா ?

அப்படி கடந்து போனால் அது நியாயமா? உழைக்கும் வர்க்கத்தின் விடிவெள்ளி அம்பேத்கரை உயர்த்திப் பிடிப்போம் !

பாட்டாளி வர்க்கத்தின் தலைமகன் அம்பேத்கர் பாதையில் பயணிப்போம்!

தொழிலாளர் தோழர் அம்பேத்கர் வாழ்க என உரக்கச் சொல்வோம் !

# வாக்குப் பதிவு எந்திரம் பற்றிச் சங்கிகளும் நண்பர்களும்

**இராமியா**

எந்த ஒரு முறைகேட்டைப் பற்றிப் பேசினாலும் சங்கிகளிடம் இருந்து முறையான விடை கிடைக்காது; அபத்தமான விடையே கிடைக்கும். அதிலும் வாக்குப் பதிவு எந்திரத்தைப் பற்றிப் பேசிவிட்டால் போதும்; சங்கிகள் அபத்தமான எதிர் வினாக்களைத் தொடுப்பார்களே பாருங்கள் ஒரு மனிதனால் இப்படியும் அபத்தமாகச் சிந்திக்க முடியுமா என்று திணற அடித்து விடுவார்கள்.

இந்த அல்லது அந்த இடங்களில் சங்கிகள் தோற்று இருக்கிறார்களே? எந்திரத்தில் முறைகேடு செய்ய முடிந்தால் அங்கு எல்லாம் வெற்றி பெற்று இருப்போமே? என்றும், எந்திரத்தில் முறைகேடு என்றால் அதன் மூலம் வெற்றி பெற்ற எதிர்க்கட்சியினர் பதவி விலகி விட வேண்டும் என்றும் உளறிக் கொட்டுவார்கள்.

எந்திரத்தைப் பயன்படுத்துபவர்கள் தங்கள் விருப்பப்படி தேர்தல் முடிவை மாற்றி அமைக்க முடியும் என்பது தான் குற்றச்சாட்டு. அதனால் தான் அறிவியல் தொழில் நுட்பத்தில் உச்ச நிலையில் உள்ள நாடுகளே கூட இதை நம்பகத் தன்மை அற்றது என்று கூறி நிராகரித்து உள்ளன என்பதே அதற்கான நிரூபணம். வெற்றி அல்லது தோல்வி மட்டுமே ஒரு கொடுங்கோலரின் உடனடி இலக்கு அல்ல. இந்த இந்த இடங்களில் இந்த இந்த மாதிரியான முடிவுகள் வருவது தங்கள் எதிர் காலத்திற்கு நல்லது என நினைக்கலாம். ஆனால் மக்கள் அவ்வாறு தீர்ப்பு அளிக்க மாட்டார்கள். ஆகவே அதிகாரத்தில் இருப்பவர்கள் எந்திரத்தில் முறைகேடு செய்து தாங்கள் விரும்பும் முடிவை மக்களின் விருப்பத்திற்கு எதிராகக் கொண்டு வர முடியும். அவ்வாறு நடக்கவும் செய்து இருக்கிறது.

வட மாநிலங்களில் இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சங்கிகள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட போது அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் சங்கிகள் தாங்கள் கொண்டு வந்த முத்தலாக் தடைச் சட்டத்தை இஸ்லாமியப் பெண்கள் வரவேற்றுத் தங்களுக்கு வாக்கு அளித்து இருப்பதாகக் கொஞ்சமும் கூசாமல் கருத்து கூறினார்கள். இது போல் சங்கிகள் ஆயிரம் வாக்குகள் கூடப் பெற முடியாத பல தொகுதிகளில் வெற்றி பெற்று இருக்கிறார்கள். எந்திரத்தில் முறைகேடு செய்யாமல் இது போன்ற முடிவுகளைப் பெறவே முடியாது.

காங்கிரஸ் கட்சியைப் பலவீனப்படுத்தி விட்டால் தங்களை அசைக்கவே முடியாது என்று நினைக்கும் சங்கிகள் அதற்கும் எந்திரத்தில் முறைகேடு செய்து உள்ளனர். அண்மையில் நடந்த வட மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தேய்ந்து விட்டது என்ற கருத்தை அவ்வாறு உருவாக்கி உள்ளனர். பொருளாதா ரச்சிக்கலில் நாட்டைத் தள்ளி விட்டு மக்களை அலைக் கழிக்கும் சங்கிகள் மேல் மக்கள் கோபமாகவே உள்ளனர். எதிர்க்கட்சிகள் எவ்வளவு தான் ஒற்றுமையாக இல்லாமல் இருந்தாலும் வாக்குகள் அவர்களுக்குள் தான் பிரியுமே ஒழிய சங்கிகளுக்குக் கிடைக்காது. ஆனால் சங்கிகள் எந்திரத்தில் முறைகேடு செய்து, தங்களுக்கு வாக்கு குறைந்து இருக்கிறது என்ற கருத்தையும் உருவாக்கி ஆனால் அதிகாரத்தை மட்டும் கைப்பற்றிக் கொண்டனர்; எதிர்க் கட்சிகள் ஒற்றுமையாக இல்லாததால் தான் தோற்றன என்ற ஒரு மாய உருவை உருவாக்கி மனதிற்குள் மகிழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றதினால் இங்கு எந்திரத்தில் முறைகேடு நடைபெறவில்லை என்று பலரும் நினைக்கின்றனர். ஆனால் இங்கு சங்கிகளின் உத்தி ஆழமான சூழ்ச்சியை உள்ளீடாகக் கொண்டு உள்ளது. இங்கு சங்கிகள் வெற்றி பெற முடியாது என்பது மட்டும் அல்ல; மூன்று இலக்க (அதாவது நூறுக்கு மேல்) வாக்குகளைப் பெற்றார்கள் என்றாலே யாரும் நம்ப மாட்டார்கள். ஆகவே எந்திரத்தைப் பயன்படுத்தி வாக்குகளை அள்ள முயன்றால் அவர்களின் சூழ்ச்சி அப்பட்டமாக வெளிப்பட்டுவிடும்; ஆகவே எந்திரத்தை வேறு விதமாகவும் அவர்களால் பயன்படுத்த முடியும் என்று நிரூபித்து இருக்கிறார்கள். எவ்வளவு முயற்சிகள் செய்தாலும் தமிழ் நாட்டில் கால் பாவவே முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கும் சங்கிகள் "தமிழ்நாட்டு மக்கள் நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்து எடுக்கும் திறன் அற்றவர்கள்; அவர்கள் மோசமானவர்களையே தேர்ந்து எடுப்பார்கள்" என்ற கருத்தை உருவாக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு பல இடங்களில் பேசியும் இருக்கிறார்கள். ஆனால் யாரும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை. இந்தத் தேர்தல் மூலம் அதைச் சாதிக்க நினைத்து மக்களின் எண்ணத்திற்கு எதிராக எந்திரத்தில் முறைகேடு செய்து மிக மிக … மிக மோசமான ஒருவரை வெற்றி பெற வைத்தும், மக்களின் நல்லெண்ணம் பெற்ற ஒருவரைத் தோற்கடித்தும் இருக்கிறார்கள்.

பொள்ளாச்சி ஜெயராமன் மீது உள்ள (அவருடைய மகனின் பாலியல்) குற்றச்சாட்டு காரணமாக அவர் அத்தொகுதியில் வெற்றி பெற்று இருக்கவே முடியாது. ஆனால் அவரை எந்திர முறைகேடு செய்து வெற்றி பெற வைத்தார்கள். மதுரை தெற்குத் தொகுதியில் எஸ்.எஸ்.சரவணன் அவருடைய தொகுதியில் செய்த பணிக்காக அவரை மாற்றுக் கட்சியினரும் விரும்பினர். ஆங்காங்கே கூடி இருந்த கூட்டத்தில் ''சரவணன் நல்ல பிள்ளை. அவன் நிச்சயமா ஜெயிக்கணும்'' என்று வெகு சாதாரணமாகவே பேசிக்கொண்டு இருந்தனர். அவர் தோற்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் அவர் தோற்று இருக்கிறார் என்றால் சங்கிகளின் சூழ்ச்சியான திட்டமும், அதை நடைமுறைப்படுத்த எந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதும் தான் காரணமாக இருக்க முடியும். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இருவருமே சங்கிகளின் அடிமை களான அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் சங்கிகள் தமிழ்நாட்டு மக்களின் மாண்பைக் குலைப் பதற்காக இதைச் செய்து இருக்கிறார்கள். இது பேல் வேறு சில தொகுதிகளிலும் செய்து இருக்கலாம். இவ்வனவு கொடூரமான சூழ்ச்சியை உள்ளீடாகக் கொண்ட சங்கிகள் ஒன்றுமே தெரியாத அப்பாவிகளைப் போல் ''முறைகேடு செய்ய முடிந்தால் அப்படிச் செய்து இருப்போமே? இப்படிச் செய்து இருப்போமே?'' என்று நடித்துக் காட்டுகிறார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களின் பெருந்தன்மை வெளிச்சத்தில் சங்கிகளின் சூழ்ச்சிகள் கரைந்து மறைந்து போய் விட்டன. அவர் மட்டும் அவருக்கு முன் பதவியில் இருந்த அரசியல்வாதிகளைப் போல் குறுகிய எண்ணத்துடன் நடந்து கொண்டு இருந்தால், இந்நேரத்தில் சங்கிகள் ''தமிழ்நாட்டு மக்கள் நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்து எடுக்கும் திறன் அற்றவர்கள் என்ற பிரச்சாரத்தை முடுக்கி விட்டு இருப்பார்கள்.




எந்திரத்தில் இணைய இணைப்பு இல்லை எனவும், ஆகவே முறைகேடு செய்ய முடியாது எனவும் வாதிடுகிறார்கள். ''ஒருவனுடைய அனுமதி பெறாம லேயே அவனுடைய உபகரணங்களில் நுழைந்து அவனுக்குத் தெரியாமலேயே அவனுடைய தரவுகளைத் திருடும் வல்லமை படைத்த பெகாசஸ் (Pegasus) போன்ற மென்பொருள் இல்லை என்று உறுதி கூற முடியுமா'' என்று கேட்டாலும், ''உலக நாடுகள் அனைத்தும் நம்பகத் தன்மை அற்றது என்று நிராகரித்து விட்ட எந்திரத்தை ஏன் பயன்படுத்தத் துடிக்கிறீர்கள்?'' என்பதற்கும் விடை சொல்வதே இல்லை.

சரி! வாக்குப் பதிவு எந்திர முறையைக் காப்பாற்றச் சங்கிகள் தீவிரம் காட்டுவது ஒரு புறம் இருக்கட்டும். நண்பர்கள் அதை எப்படி நோக்குகின்றனர்? எந்திரப் பயன்பாட்டைத் தடுக்க வேண்டியதன் முக்கியத்து வத்தைக் கூறினால், ஏதே அது மட்டும் தான் பிரச்சினை என்று சொல்வதாக நண்பர்கள் நினைப்பது வேதனைக்கு உரியது. தேர்தல் வழியிலேயே மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நாம், இந்திய சமூக அமைப்பு, ஆதிக்கவாதிகளின் ஆதிக்கப் பிடிப்பு ஆகியவற்றை எதிர்த்துப் போராடி முன்னேறினால் அவர்களால் எந்திரத்தின் மூலம் அதை எளிதாக முறியடித்து நம்மைக் களைக்க வைக்க முடியும். ஆகவே நம் போராட்டத்தைப் பற்றி அவர்கள் அதிகமாகக் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. போர்க்களத்தில் அடிபடும் வீரர்களுக்குத் தங்களைக் காப்பதற்கு ஒரு மருத்துவக் குழு இருக்கிறது என்ற நம்பிக்கை இருந்தால் அவர்கள் துணிவாகப் போரிடுவார்கள். அப்படி இல்லை என்றால் போரில் அவர்களின் மனக் குவிப்பு சிதைந்து, போரிடும் வலிமையைக் குறைக்கும். அது போலவே தேர்தலில் எந்திரப் பயன்பாடு இல்லை என்றால் ஆதிக்கவாதிகளின் மனதில் தோல்வி பற்றிய அச்சம் ஏற்பட்டு அவர்களது போராட்ட வலிமை குறையும். ஆகவே நாம் அதைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டி இருக்கிறது.

எந்திரம் அவ்வளவு தீங்கு விளைவிக்கும் என்றால் எதிர்க் கட்சிகள் ஏன் இதை வன்மையாக எதிர்க்கவில்லை என்று நண்பர்கள் கேட்கிறார்கள். எதிர்க்கட்சிகள் கேட்கவில்லை என்பதற்காகவே அதில் அபாயம் இல்லை என்று எப்படி நினைக்க முடியும்?

இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு உட்படாத மற்றும் பார்ப்பனர்களால் மிரட்டிப் பணிய வைக்க முடியாத அரசியல் கட்சிகள் உண்டா? பார்ப்பனர்களைப் பொறுத்த மட்டில் ஆர்.எஸ்.எஸ்.சின் கொள்கை தான் இறுதி இலக்கு. அனைவரும் அதை வெளிப்படை யாகக் கைக்கொண்டால், அதற்கு எதிராக மக்கள் கொந்தளித்து எழுந்து விட்டால் தாங்கள் முற்றிலும்

அழிந்து விட நேரும் என்று எண்ணியே அனைத்து அரசியல் கட்சிகளிலும் விரவி இருக்கிறார்கள். அந்தந்த அரசியல் கட்சிகளில் உள்ள அவாள் எந்திரத்திற்கு எதிரான பொதுக் கருத்து உருவாகாத வரை அதைப் பற்றிப் பேசாமல் இருக்கவே விரும்புவார்கள். அதன் படியே கட்சிகளையும் ஆட்டிப் படைப்பார்கள்.

அது ஒரு புறம் இருக்கட்டும். வாக்காளர் சரி பார்க்கும் தாள் தணிக்கைச் சான்றுகள் (VVAPT - Voters Verifiable Paper Audit Trial) முழுவதும் எண்ணப்பட்ட பிறகு தான் தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டும் என்று உச்ச நீதி மன்றத்தின் ஆணை உள்ள போதும் அதைப் பற்றி இம்மி அளவும் கவலைப் படாமல் தேர்தல் ஆணையம் முடிவுகளை அறிவிக்கிறதே? அது எப்படி முடிகிறது? அதைப் பற்றி எந்த ஒரு அரசியல் கட்சியும் கவலைப்படவில்லையே? ஏன்? எப்படி? எது எதற்கோ தானாக முன்வந்து நீதி மன்ற அவமதிப்பாக எடுத்துக்கொள்ளும் நீதி மன்றங்கள், உச்ச நீதி மன்ற ஆணையைத் துச்சமாக மதித்து, தாள் தணிக்கைச் சான்றிதழ்களை எண்ணாமலேயே முடிவுகளை அறிவித்தமைக்கு எதிராக ஏன் எடுத்துக் கொள்ளவில்லை? இந்நிகழ்வுகள் எல்லாம் நிலைமைகள் மிக... மிக... மிக ஆபத்தாகவே உள்ளன என்று தெரிவிக்கவில்லையா? தேர்தல் மூலம் தீர்வு காண நினைப்பவர்கள் வாக்குப் பதிவு எந்திரம் இருக்கையில் தங்கள் பணி அனைத்தும் வீணாகி விடும் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? நாம் இந்திய சமூ கத்தின் அடிமை வேர்களை அறுத்து எறியப் போராடும் போது நம் வலிமையைக் கூட்டிக் கொள்வது மட்டுமே போதாது. எதிரிகளின் வலிமையைக் குறைப்பதும் முக்கியம். எதிரிகளின் வலிமையைக் குறைக்க வேண்டும் என்று கூறுவது நம் வலிமையைக் கூட்டக் கூடாது என்பதாகப் பொருள் ஆகாது.

# சங்கமித்ரா!

'விடுதலை' ஏட்டில் குத்தூசி சா.குருசாமியின் ''பலசரக்கு மூட்டை''க் கட்டுரைக் கருத்துகளைப் படித்து மகிழ்ச்சி பொங்கச் சிரித்தவர், பெரியார்!

அவருக்கு அடுத்தாற்போல், உங்களுடைய கட்டுரைகளைப் படித்துத்தான், பெரியார் அப்படிச் சிரித்து மகிழ்ந்தார்.

-தோழர் வே.ஆனைமுத்து.

இந்தியிலும் ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் தமிழிலும் நீரோட்டமாக உரையாற்றும் திறன் படைத்தவர். தோழர் சங்கமித்ரா பலமுறை தோழர் வே.ஆனைமுத்து அவர்களுடன் வட மாநிலங் களிலுக்குச் சென்று வந்தவர். தோழர் ஆனைமுத்து பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். தோழர் ஆனைமுத்து நூல்கள் வெளியிடத் தூண்டு நராகவும் துணையாகவும் விளங்கியவர்.

**பார்ப்பனீயத்தின் வைரி!**
**பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு முன்னணிப் போராளி!**

ஒடுக்கப்பட்டோர் உரிமைக் காப்புப் படையின் முன்னணி வீரர்! ஒடுக்கப்பட்டோர் குரல், தன் முன்னேற்றம், சங்கமித்ரா விடையளிக்கிறார் என இதழ்கள் நடத்தினார்.



பிறப்பு : 03.03.1940 இறப்பு : 07.04.2012

விடுதலை, உண்மை, சிந்தனையாளன், வளர் தொழில், கண்ணியம், முகம் ஆகிய இதழ்களில் எழுதியவர். இயற்பெயர் பா.இராமமூர்த்தி.

தோழர் சங்கமித்ரா பழகுவதற்கு இனிமையானத் தோழர்! தோழர் சங்கமித்ரா மறைந்து பத்தாண்டுகள் ஓடிவிட்டன.

**தோழர் சங்கமித்ரா புகழ் ஓங்குக!**

# கொள்கைக் குன்றம் சீர்காழி மா.முத்துசாமி

சா.குப்பன்

எடுப்பான தோற்றம், மிடுக்கான நடை, கணீரென்ற குரல், உரையாடலிலும், உரை யாற்றுவதிலும், தாம் அறிந்த கருத்துகளை அழுத்தம் -திருத்தமாக மொழிதல், மற்றவர்கள் என்ன நினைக்கிறார்களோ என்று தயங்காமல் தன் கருத்தை உரைத்தல், கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்தல், தொய்வின்றித் தொடர்ந்து பணியாற்றுதல், உண்மை - நேர்மை இவற்றுடன் அனைவருடனும் கனிவுடனும் அன்புடனும் பழகுதல், விருந்தோம்பல் ஆகிய அனைத்தின் தொகுப்பே பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைக் குன்றம் சீர்காழி மா.முத்துசாமி அவர்கள்.

**வட மாநிலங்களில் பயணம்**

1978இலிருந்து இந்திய ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட, மண்டல் குழு அமைக்கப் படுவதற்கு முன்னும் அக்குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகளை இந்திய அரசிடம் அளித்த பின், அது நடைமுறைப்படுத்தப்படுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும்வரை அதற்காக சலிப்பின்றித் தொடர்ந்து உழைத்தார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி (1976 முதல் 1987 வரை பெரியார் சமஉரிமைக் கழகம்)இன் துணைப் பொதுச் செயலாளர் என்ற முறையில் பொதுச் செயலாளரான தோழர் வே.ஆனைமுத்து அவர்களுடன் புதுதில்லி மற்றும் பீகார், உத்தரப் பிரதேசம், அரியானா, பஞ்சாப் ஆகிய இடங்களுக்கு அடிக்கடி பயணம் மேற் கொண்டு அங்குள்ள பிற்படுத் தப்பட்ட வகுப்பு மக்களிடையே இட ஒதுக்கீடு கோரிக்கை வெற்றி பெற ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபட்டு வந்தார். 17.09.1978 முதல் 19.10.1968முடிய பீகார் முழுவதும் பயணம் செய்து பரப்புரைச் செய்தார். 29.04.1978 முதல் நவம்பர் 2001வரை வட இந்தியாவுக்குப் பேரார்வத்துடன் சென்று வந்தார். பெரியாரின் கொள்கைகளை அங்கு பரப்புவதற்காக தொடர்ந்து தன் உழைப்பையும் பணத்தையும் செலவிட்டு வந்தவர் தான் தோழர் மா.முத்துசாமி அவர்கள்.

"பற்றற்ற உள்ளம்
படைக் கஞ்சா பேராண்மை
வற்றாத தன்மான உணர்ச்சி
கற்றார்க்குரிய கடப்பாடு
உறுதியோ டைந்தும்
பெரியார் தொண்டர்க்கு அணி."

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் நம் தோழர் மா.முத்துசாமி.

அகவை 20இல் சுயமரியாதைக்காரர் ஆனார்.

தம் இருபதாம் அகவை வரை தீவிர காங்கிரசு கட்சிப் பற்றாளராக இருந்த முத்துசாமி 1947இல் திருச்சியில் பெரியார் உரையாற்றிய ஒரு பொதுக் கூட்டத்தில் கல்லெறிவதற்காகச் சென்றார். பெரியாரின் உரையைத் தொடக்கம் முதல் தொடர்ந்து கேட்டார். அவரது உரையில் இருந்த ஆணித்தரமான அடிப்படைகள், மறுக்க முடியாத உண்மைகள் தோழர் முத்துசாமியைச் சிந்திக்க வைத்தது. அன்று முதல் பெரியார் சுயமரியாதைக் கொள்கைப் பற்றாளரானார். 1948முதல் ஏற்றுக்கொண்ட கொள்கையைப் பரப்பத் தொடங்கினார். எதிலும் ஒரு தீவிரம் காட்டும் இயல்பினர் ஆதலால், கொள்கையைக் கடைப்பிடித்தலிலும் பரப்புவதிலும் உறுதியும் விசையும் அவரிடம் அவரிடம் இருந்தது.



பிறப்பு : 28.06.1927 இறப்பு : 27.04.2002

### குடும்பச் சூழல்– இளமையில் வறுமை.

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் (இப்போது விளாத்திகுளம்) ஆற்றங்கரை எனும் சிற்றூரில் மாடசாமி-வெள்ளையம்மாள் இணையர்க்கு 28.06.1927இல் முத்துசாமி மூன்றாம் குழந்தையாக - முதல் மகனாகப் பிறந்தார். உடன்பிறந்தோர் இரண்டு தமக்கையர், ஒரு தம்பி, இரண்டு தங்கையர். மாடசாமி யின் தந்தை அவ்வூர் சமீன்தாரிடம் முகாமையானப் பொறுப்பு அலுவலராகப் பணியாற்றினார். ஆனாலும் மாடசாமி தமக்கு சொந்தமான நிலத்தில் பயிர் செய்து வந்தார். மாடசாமியின் குடும்பம் பெரியதானதால் வறுமை வந்து சேர்ந்தது. முத்துசாமியின் அகவை மூன்றில் குடும்பம் சாத்தூருக்கு இடம் பெயர்ந்தது. முத்துசாமியின் படிப்பு அவ்வூர் எட்வர்டு பள்ளியில் ஆறாம் வகுப்பில் இடைநின்றது. 12அகவையில் எண்ணெய்க் கடை பணியாள் ஆனார். 13அகவையில் தனியாக திருச்சிராப்பள்ளிச் சென்றார். தலைச்சுமைப் பாத்திர விற்பனையில் ஈடுபட்டார். அன்றைய திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு, செங்கல் பட்டு மாவட்டங்களிலும் புதுவையிலும் உள்ள ஊர்களில் அலைந்து-திரிந்து பாத்திரங்கள் விற்பனை செய்தார்.

### வாழ்க்கைத்துணை ஒப்பந்தம்

முத்துசாமிக்கு திருச்சியில் ஆதரவு அளித்து வந்தவர் வயனபெருமாள் என்பவர். குடந்தையில் வயனபெருமாளின் மாமனார் சீனியப்பர் அறிமுகம் கிடைத்தது. முத்துசாமியின் கடுமையான உழைப்பு, நேர்மையைக் கண்டு, அவர்தம் மகள் பேச்சியம்மாளை முத்துசாமிக்கு மணம் முடிக்க விரும்பினார்.

முத்துசாமி அவர்கள் சுயமரியாதைக் கொள்கையை ஏற்றுக் கடைப்பிடித்ததுடன் அவர் வசித்தப் பகுதியில் பரப்புவதிலும் ஈடுபட்டிருந்தார். எனவே, திருமணம் குடந்தையில் தோழர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. திருமணத்தில் சி.பி.சிற்றரசு, குடந்தை கே.கே.நீலமேகம் ஆகியோர் வாழ்த்துரைத்தனர்.

### சாதி மறுப்புத் திருமணம்

திருச்சியில் முத்துசாமியின் நண்பர் கோபால்சாமி, நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்; பட்டுநூல் சாதியைச் சேர்ந்த சுந்தரியம்மாளுக்கும் கோபால்சாமிக்கும் காதல் மலர்ந்தது. இக்காதலுக்கு இரு குடும்பத்தாரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். முத்துசாமியும் அவரின் மனைவியும் ஆதரித்தனர். அவ்விணையருக்கு முத்துசாமி முன் நின்று திருமணம் நடத்தி வைத்தார். இது அப்பகுதியில் நடைபெற்ற முதல் சாதி மறுப்புத் திருமணம் ஆகும். இதன்பின், முத்துசாமியின் குடும்பம் குடந்தைக்கு இடம்பெயர்ந்தபோது, கோபால்சாமி-சுந்தரியம்மாள் இருவரையும் உடன் அழைத்துவந்து, அவர்களுக்கு உதவி, ஓர் உணவுக்கடையை நடத்தச் செய்தார்.

### கைம்பெண் மறுமணம்

கொள்ளிடம் பெரியசாமிக்கும் கைம்பெண்ணான தங்கதுரைச்சியம்மாளுக்கும் முத்துசாமி முன்நின்று, மதுரை மா.சா.இராமசாமி அவர்கள் தலைமையில் திருமணம் நடத்திவைத்தார். தஞ்சை, திருச்சி மாவட்டப் பகுதியில் நாடார் வகுப்பில் நடந்த முதல் கைம்பெண் திருமணம் இது ஆகும்.

### சீர்காழி வாசி முத்துசாமி

1963இல் சீர்காழி கடைவீதியில் ‘‘முத்து எவர்சில்வர் மாளிகை’’ என எவர்சில்வர் பாத்திர விற்பனை கடையைத் தொடங்கினார். குடும்பமும் சீர்காழியில் அமைந்தது. அன்பழகன், செந்தமிழ்ச்செல்வி, இரணியன், மரகதமணி, நேருஜி (பெண்) ஆகியோர் இவரின் மக்கள். குடும்ப உறுப்பினர்களை மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பயிற்சி வகுப்புகளுக்கு அழைத்துச் சென்றதன் காரணமாக அனைவரும் கொள்கை நெறியாளர் ஆகினர்.

### திராவிடர் கழகத்தில் இயக்கப் பணி

1975 வரை தஞ்சை மாவட்ட, (இப்போது தஞ்சை, திருவாரூர், நாகை) திராவிடர் கழகப் பொருளாளராகச் செயல்பட்டார். நாங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் கைத்தொழில் ஆசிரியராகப் பணியாற்றிய இரெ.தனஞ்சேயன்-பாக்கியலட்சுமி திருமணம் தோழர் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற முதல் சுயமரி யாதைத் திருமணம். பின்னர் நூற்றுக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களை இவர் தலைமை ஏற்று நடத்திவைத்தார். சீர்காழி ஏ.எஸ்.குருசாமிக்கும் டெய்சிராணிக்கும் நடத்திய திருமணம் இந்து, கிருத்துவ மதமறுப்புத் திருமணமாகும்.

1949இல் நடந்த பெரியார் - மணியம்மை திருமணம் இவருக்கு ஏற்புடையதாக இல்லாத நிலை யிலும் பெரியாரின் பெரும்பணியைக் கருத்தில் கொண்டு, தொடர்ந்து திராவிடர் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். விடுதலை ஆசிரியராகவும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளராகவும் விளங்கிய குத்தூசி குருசாமியின் சொற்பொழிவுகளையும் எழுத்துகளையும் விரும்பிப் படிப்பவர் மா.முத்துசாமி. 1962 சனவரியில் குத்தூசி குருசாமி தி.க.விலிருந்து விலக்கப்பட்டார். திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுத் தலைவராக இருந்த திருச்சி தி.பொ.வேதாசலம் அவர்களும் தி.க.வில் இருந்து நீக்கப்பட்டார். குத்தூசி குருசாமியும் தி.பொ.வேதாசலமும் இணைந்து ‘‘தமிழ்நாடு சுயமரி யாதை இயக்கம்’’ எனப் புதிய அமைப்பைத் தொடங்கிய போதும் மா.முத்துசாமி தி.க.விலேயே செயல்பட்டார்.

### மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி (பெரியார் சமஉரிமைக் கழகம்)

பெரியார் மறைவுக்குப் பின், திராவிடர் கழகத்தில் இருந்து பலர் விலக்கப்பட்டனர். அவ்வமைப்பின் செயல்பாடுகளில் மனநிறைவின்மையுடன் இருந்தனர் பலர். இவர்கள் அனைவரும் 08.08.1976அன்று சீர்காழியில் தோழர் மா.முத்துசாமி இல்லத்தில் திருச்சி தோழர் வே.ஆனைமுத்து தலைமையில் கூடி ‘‘பெரியார் சமஉரிமைக் கழகம்‘‘ என்ற அமைப்பை நிறுவினர். இந்த அமைப்பு 13.03.1988 முதல் ‘‘மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி’’ என்ற பெயரில் இயங்கிக் கொண்டுள்ளது. இவ்வமைப்பின் பொதுச் செயலாளராக தோழர் வே.ஆனைமுத்துவும் துணைப் பொதுச் செயலாளராக தோழர் மா.முத்துசாமியும் இயங்கி வந்தனர்.

**தொண்டின் இறுதி**

25ஆண்டுகள் நீரிழிவு நோயுடன் இருந்தும் ஓய்வறியாது, தொய்வின்றி பணியாற்றியத் தொண்டர்-தலைவர் தோழர் மா.முத்துசாமி. சீர்காழியில் வணிகர் சங்கம் தொடங்கக் காரணமானவர். சீர்காழி நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் அமைப் பாளராக விளங்கியவர் மா.முத்துசாமி. பல்வகை ஏடுகள், பருவ இதழ்கள், நூல்கள் விற்பனை செய்வது, பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது, மாநாடுகள் நடத்துவது, போராட்டங்களில் பங்கேற்பது என மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தளபதியாகவும், தோழர் வே.ஆனைமுத்து அவர்களுக்கு ஏற்ற தோழராகவும், பெரியாரின் கொள்கை மறவராகவும் விளங்கிய கொள்கைக் குன்றம் சீர்காழி மா.முத்துசாமி அவர்கள் 27.04.2002இல் தம் 75ஆம் அகவையில் அரைநூற்றாண்டு இயக்கத் தொண்டினை முடித்துக்கொண்டார்.

தோழர் சீர்காழி மா.முத்துசாமி ஏற்று, கடைப்பிடித்தக் கொள்கைகள் வெல்க!

## பகுத்தறிவாளர்கள் பொதுமைக்கொள்கையர் சிந்தனைக்கு

மதச்சார்பற்ற, முற்போக்கு இயக்கங்களின் வேலை தேர்தலோடு நின்றுவிடுவதில்லை. ஏனெனில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பார்ப்பனியமும் வைதிகமும் அரசர்களை மயக்கி அதிகாரத்தின் துணையுடன் கட்டி எழுப்பிய மனுநீதி சமூகம் முழுவதையும் பிரித்து, ஒடுக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஒற்றுமை உண்டாகாமல் பிளவுபடுத்தி ஆள்கிறது. பெரிய சமூக விரோதிகளை மாநில, இந்திய அளவிலும், சிறிய மோசடிப் பேர்வழிகளை சிற்றூர் மட்டத்திலும் உறுப்பினராக்கிப் பணம் கொடுத்து ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை விதைக்கிறது.

பகுத்தறிவாளரும் பொதுமையரும் பல காலம் போராடிப் பரப்பிய கருத்தியலைச் சாதியின் பெயராலும் சமுதாயத்தின் பெயராலும் ஒரே நொடியில் பண வலிமையால் காலிசெய்யும் நிலையில் சனாதனிகள் உள்ளனர். இப்போதே முற்போக்கு இயக்கங்கள் சிற்றூர், வட்டாரம், நகரப் பகுதிகளில் மார்க்சிய, பெரியாரியக் கருத்துகளைப் பாடம் நடத்தி மனதில் பதியவைக்கவேண்டும்.


அது மட்டுமில்லை. ‘ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி’ என்றார் பட்டுக்கோட்டையார். ‘நல்லவராக இருந்தால் மட்டும் போதாது வல்லவராகவும் இருக்கவேண்டும்’ என்று மு.வ.எழுதினார்.

இலக்கிய மன்றங்களை நடத்துவதுடன் உடற்பயிற்சிக் கூடங்களையும் நடத்துமாறு மாவோ தன் ‘‘புதிய சனநாயகம்’’ கட்டுரையில் எழுதுவார். சங்கிகள் அதையெல்லாம் கவனமாகத் தொடர்ந்து செய்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ் சகா என்ற ஆயுதப் பயிற்சி வகுப்புகளை அரசு உதவிபெறும் கல்விக்கூடங்களிலேயே நடத்துகிறார்கள்.

அதனால்தான் பழநி பாபா தொடங்கி கல்புர்கி, பன்சாரே, கௌரி லங்கேஷ், தபோல்கர் என வரிசையாகக் கொன்றுவிட்டுத் தப்பிக்க முடிகிறது. சுதா பரத்வாஜ்,வரவர ராவ் , ஸ்டேன் சாமி முதல் ஆனந்த் தெல்தும்டே வரையில் பொய்க் குற்றம் சாட்டிச் சிறையில் அடைக்கிறார்கள்.

நாம் நம்மைத் தற்காத்துக்கொள்ளவேணும் இப்பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். எதிரியிடம் உள்ள ஆயுதம் நம்மிடம் இருந்தால்தான் சமாதானம் நிலவும்; சமத்துவம் அமையும். சித்திரையில் தொடங்கிவிடுவோம்.

**பேரா. கோச்சடை** முகநூல் பதிவு (11.04.2021)

# வர்க்க வருண ஆதிக்க ஒழிப்பு மாநாடு

# செஞ்சட்டைப் பேரணி

இந்தியப் பாசிச அதிகாரக்கோட்டையை அதிரவைக்கட்டும்!..

மக்களையும், மாநிலங்களையும் சூறையாடும்
இந்தியப் பார்ப்பனியத்தை, அம்பானி, அதானி உள்ளிட்ட
பெரு முதலாளியத்தை வேரறுக்கட்டும்..

வல்லரசிய உலக முதலாளியத்தை விரட்டியடிக்கட்டும்..
தமிழ்நாட்டின் செஞ்சட்டைப் பேரணி..

**29** மே 2022
ஞாயிற்றுக்கிழமை

## மதுரை பேரணி - மாநாடு

**பேரணி தொடங்குமிடம் : மதுரை - காலவாசல்**

**நேரம் : பிற்பகல் 3.00 மணி**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் : வாலாசா வல்லவன், எண். 2/12, சி.என்.கே.சந்து,
சேப்பாக்கம், சென்னை – 600005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
142, ஜானிஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014. அலைப்பேசி : 044 – 2848 2444

Editor & Published by Valasa Vallavan, No. 2/12, C.N.K.Lane, Chepauk, Chennai - 600005.Mobile : 8668109047
Printed by Paavai Printers & Pvt.Ltd.,
142, JaniJanikhan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044 - 2848 2444